ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர்

நெஞ்சுவிடு தூது

குருபூசை மலர்

1966

மயிலம் - பொம்மபுர ஆதீனம்.

மயிலம்-பொம்மபுர ஆதீன வெளியீடு-1.

ஸ்ரீமத் சிவஞான பாலய தேசிகன் திருவடி வாழ்க.

நல்லாற்றூர், ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய

ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர்

நெஞ்சுவிடு தூது

மயிலம் - பொம்மபுர ஆதீனம்,
பதினெட்டாம் பட்டம்,
ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின்
முதலாண்டுக்

குருபூசை மலர்

பத்தொன்பதாம் பட்டம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின்
அருளாணையின்படி வெளிவருவது.

உரையெழுதியோர்:

சு. குமாரஸ்வாமி ஆச்சாரியார், எம். ஏ., தலைவர்.
ஆ. சிவலிங்கனார், பேராசிரியர்.
(ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி, மயிலம்)

1966

உ

சிவமயம்.



பத்தொன்பதாம் பட்டம்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்.

சிவமயம்.

மயிலம் - பொம்மபுர ஆதீனம், பத்தொன்பதாம் பட்டம்,

ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் அருளிய


ஆ சி யு ரை .

எல்லாம் வல்ல சிவபிரான் உயிர்கள் உய்யவேண்டி இப் பூவுலகில் குரு லிங்க சங்கம வடிவுகளில் வருவார். உயிர்கள்—சிறப்பாக மக்கள், அவ்வடிவங்களை ஆதாரமாகப் போற்றி வழிபட்டு வீடுபேறு எய்தல் வேண்டும். இலிங்க வழிபாட்டால் வீடு எய்துவது பக்குவப் பட்டவர்களால் முடியும். சங்கமர் (அடியவர்) எங்கும் திரிபவர். ஆதலால் ஓரிடத்திருந்து சீடர்களுக்கு உபதேசம் செய்யும் குரு வழிபாட்டால் எளிதில் வீடு எய்தலாம். குரு, பக்தனுயினும் அல்லாதவனுயினும் அவனைத் திருத்தி நன்னிலைக்குக் கொண்டுவந்து வீடு எய்துவிப்பார்.

"பாவிக் குதாசனர்க்குப் பத்தர்க்குச் சீடர்க்கு
மேவிக் கருணைபுரி மேன்மையான்". — என இவ்வாதீனப் புலவராகிய ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் தம் குருவாகிய ஸ்ரீ சிவஞான பாலய தேசிகரைப்பற்றிக் கூறியது காணலாம். எனவே, யாவரும் குருமூர்த்தி வழிபாட்டினுல் பயன் எய்துவார்களாக.

இம்முறையில், ஆதீனக் குருமூர்த்திகளாகிய ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளைக் குருவாகக்கொண்டு வீடெய்தியவர் மேற்குறித்த ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் ஆவர். அவர் தம் குருமூர்த்தி மீது நெஞ்சுவிடு தூது முதலிய நூல்களையியற்றி வழிபட்டார்.

அந்நூல்களுள் ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது என்னும் நூல் சிவனும் குருவும் வேறல்லர் என்றும், சிவ ஞானியே முத்திபதம் அருள்வர் என்றும் கூறுவது. ஸ்ரீ சிவப்பிரகாசர் தம்மைத் தலைவியாகவும் சுவாமிகளைத் தலைவனுகவும் எண்ணி அவர்பால் தம் நெஞ்சைத் தூதுவிட்டதாகப் பாடியுள்ளார். இந்நூல் உரையுடன் 18-ஆம் குருமூர்த்திகளின்முதலாண்டுக் குருபூசை மலராக வெளிவருகின்றது. அன்பர்கள் போற்றிப் படித்துக் குருவருள் பெற்றுய்வார்களாக என ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளையும் முருகப்பெருமானையும் நினைக்கின்றோம்.



திருக் கயிலாய பரம்பரை
மயிலம் பொம்மபுர ஆதினம்
ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
18–வது பட்டம்

உ

வேலுமயிலுந்துணை.

ஸ்ரீ சிவஞான பாலய தேசிகன் திருவடி வாழ்க.

முன்னுரை.

சிற்றிலக்கியம்.

செந்தமிழ்மொழி சொற்பொருள் வளமிக்க மொழி; இலக்கண வரம்புடையது; பரந்துபட்ட இலக்கியங்களையுடையது. இலக்கியங்களைப் பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என இரண்டாகப் பிரித்தனர் பிற்காலத்தார். அல்வாறு பிரித்தமைக்குக் காரணம் விளங்கவில்லை. புராணங்கள், நீதி நூல்கள், வரலாற்று நூல்கள், அறம் பொருள் இன்பநூல்கள், வீடுபற்றிய நூல்கள் ஆகியவை பேரிலக்கியம் ஆகும் என்றும், தெய்வங்கள்மீதும், மன்னர், வள்ளல் போன்ற மக்கள்மீதும் அருள்குறித்தும், பொருள்குறித்தும் பாடப்பட்டன சிற்றிலக்கியம் என்றும், புலவர் தந்நலம் கருதாது பாடியன பேரிலக்கியம் என்றும், தந்நலம் கருதிப் பாடியன சிற்றிலக்கியம் என்றும் ஒரு சாரார் கூறுவர். அவர் தந்நலம் கருதியது சிறுமை என்பர். கூத்தராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை முதலியன தந்நலம் கருதியனவாகவே உள்ளனவாயினும் அவை பேரிலக்கியம் எனப் பட்டன. ஆதலின் இக்கருத்து ஏற்பதற்குரியதன்று என்னலாம்.

'சிறுமைக்கு அளவுண்டு; பெருமைக்கு அளவேயில்லை; ஆதலின் அளவு குறித்தே பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என்றனர்' என்பர் ஒரு சாரார். இவர் கூற்று ஏற்புடையதாகலாம். பெருமை என்பது உரைப்போர் உள்ளக்கருத்தின் அளவைக்கொண்டது. மேற்கூறிய புராணம், நீதி முதலியன அளவுக்குட்பட்டனவல்ல. பாடும் புலவனின் உள்ளத்தளவாக அவை விரியும்; சுருங்கும். சிற்றிலக்கியங்கள் யாவும் அளவுக்குட்பட்டன. இப்படி அமைய வேண்டும், இத்துணைப்பாடல்கள் இருக்கவேண்டும், இன்னின்ன உறுப்புகள் உள்ளிருக்கவேண்டும் என்ற வரையறை சிற்றிலக்கியத்துக்குண்டு. சிற்றிலக்கியம் கட்டுப்பாட்டுக்குட்பட்டது. பேரிலக்கியம் அன்னதன்று. எனவே, சிறுமை பெருமைகள் அளவு கருதியே குறிக்கப்பட்டன என்னலாம், 'பேரிலக்கியம் இத்துணை என்றில்லை; சிற்றிலக்கியம் தொண்ணூற்ருறு உண்டு என்றும் அளவு கூறு கின்றனர். சிற்றிலக்கியத்தைச் சில்லரைப்பிரபந்தம் என்றும் வழங்குவர்.

சிற்றிலக்கியம் தொண்ணூற்றாறு என்றாலும் இருப்பனவாகத் தெரியவருவன சிலவே. அவை உலா, தூது, கலம்பகம், பிள்ளைத் தமிழ், அந்தாதி, கோவை, பரணி, மாலை, தாலாட்டு முதலியனவாம். இவற்றுள் வரலாற்று நூல்களும் உண்டு. மூவருலா, கலிங்கத்துப் பரணி முதலியன வரலாற்று நூல்களே. வீட்டுலகுக்கேதுவாகிய இன்ப நூல்களும் உண்டு. இன்று தமிழுலகில் படிக்கப்பட்டும் போற்றப்பட்டும் வரும் சிற்றிலக்கியங்கள் சிலவே. பல படிக்கப்பட வில்லை. அவற்றையெல்லாம் படிப்பிக்கவேண்டுவது தமிழ்ப் புலவராயினார் கடன்.

மேற்குறித்த சிற்றிலக்கியங்களுள் பரணி தவிர, மற்றைய நூல் களைப் பாடியுள்ள பெருமை, கற்பனைக்களஞ்சியம், துறைமங்கலம், ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளையே சாரும். அவர் வீரசைவர். வீர சைவ ஞானாசாரியரும் தம் குருநாதருமாகிய ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர்மீது நெஞ்சுவிடுதூது, தாலாட்டு, பிள்ளைத்தமிழ், கலம்பகம் ஆகிய நூல்களும், சிவபிரான்மீது அந்தாதி, கோவை, கலம்பகம், மாலை முதலியனவும், நால்வர்மீது நான்மணிமாலையுங் பாடியுள்ளார். இவை தவிரப் பிரபுலிங்கலீலை, திருக்கூவப்புராணம் முதலிய பேரி லக்கிய நூல்களும் இயற்றியுள்ளார். அவர் இயற்றியனவாக 32 நூல்கள் தெரியவருகின்றன. அவற்றை ஒன்றுசேர்த்துச் 'சிவப்பிர காசர் செந்தமிழ் நூல்கள்' என்ற பெயரில், மயிலம் – பொம்மபுர ஆதீனம் பதினெட்டாம் பட்டத்து மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள் கி. பி. 1944-ல் வெளியிட்டருளினார்கள். அந் நூல்களுள், அம்மகா சந்நிதானம் அடிக்கடி நினைவுபடுத்தும் நூல், 'ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடுதூது' என்ற நூலாகும். அதற்குக் காரணம், அது வெளிவருதற்குரிய காரண மும் அதன் சிறப்புமாகும்.

நூல் வரலாறு.

ஒருகால், தம் ஞானாசாரியராகிய ஸ்ரீ சிவஞான பாலய தேசிக ரைக்கண்டு வழிபடவேண்டித் திருப்போரூரிலிருந்து பொம்மய பாளயம் நோக்கி வந்துகொண்டிருந்த ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிக ளுடன் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளும் வந்தனர். இவர்கள் பொம்மபாளயத்துக்கருகே புத்துப்பட்டு என்ற ஊர் வந்தவுடன் பகல் மறைந்தது. "நாம் ஸ்ரீ சிவஞான பாலய தேசிகரைத் தரிசிக்கச் செல்வதால் அவர்மீது பாடல் புனைக" என்று, ஸ்ரீ சாந்தலிங்க

சுவாமிகள், ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகளிடம் கூறினர். அதற்கு ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், "நாம் மனிதரைப் புகழ்ந்து பாடுவதில்லை" என மறுத்துவிட்டனர். அன்றிரவு அவ்வூர் ஐயனுர் கோயிலில் இவர்கள் துயில் கொண்டனர். ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் கனவில் முருகப்பெருமான் மயில் வாகனத்துடன் எழுந்தருளி, ஒரு பாத்திரத்தில் விடுபூக்களை வைத்து, "இவற்றைத் தொகுத்து எமக்கு அணிக" என்று கூறி மறைந்தருளினுர். இதனை அவர், ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகளிடம் தெரிவித்தனர். "முருகப்பெருமான் ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் பெருமையை உணர்த்தவே இவ்வாறு தோன்றினுர். இறைவனே சிவஞானி என்று நாம் உணர்தல்வேண்டும்" என ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள், கனவிற்கு விளக்கம் கூறினர். உடனே ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் மீது நெஞ்சுவிடு தூது, தாலாட்டு ஆகிய இரண்டு நூல்கள் இயற்றினர். ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகளுடன் பொம்மயபாளயம் சென்று மகா சந்நிதானத்தை வழிபட்டனர். அங்கேயே தாம் சீடருமாயினர்.

நூலின் சிறப்பு.

நூல் வந்த வரலாறு இது. முருகன் அருள்கொண்டு பாடப்பட்ட இந்நூல் மிகச் சிறப்புடன் விளங்கும் ஒரு ஞான நூலாகும். வீர சைவ சமயக் கோட்பாடுடையது; சிவபிரானே ஸ்ரீ சிவஞான பாலய தேசிகராக அவதரித்தார் என்ற கருத்தை நூல் முழுவதும் வெளிப்படுத்துவது; தசாங்கத்தைச் சிறப்புற–யாவரும் வியக்கக்கூறுவது; சேயூர் என்ற ஊரில் 'இல்', 'ஈ' என்ற சொற்கள் வினைச்சொற்களாக இல்லாமல் பெயர்ச்சொற்களாகவே உள்ளன எனக் கூறும் இலக்கண ஆட்சியழகுடையது; உணவுக்குச் சுவைதரும் உப்பைச் சுவை என்றே பெயரிட்டழைப்பது ; சந்தர்ப்பத்துக்கேற்ற உவமையழகுடையது ; இல்லுள் (வீடு, உடம்பு) நம்மை (உயிரை) வைத்து இறைவன் இயக்குவதற்குத் தேரில், பாகன் இயக்குவதாகப் பாவனைசெய்து அப்பாகன் பதுமை வைத்து மக்கள் செலுத்துவதை உவமையாகக் கூறியது; இவ்வாறு பல சிறப்புகளுடையது இந்நூல்.

'நெஞ்சுவிடுதூது' என்பது, ஒரு தலைவி தன் நெஞ்சை விளித்துத் தான் காதல் கொண்ட தலைவனிடம் அவனின்றித் தான் படும் துயர் யாவும் சொல்லிப் பதில்பெற்று வருமாறு விடுவதாகும். அம்முறையில் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், ஸ்ரீ சிவஞான பாலய தேசிக

ரிடம் தம் நெஞ்சைத் தூது விடுவதாகப் பாடியுள்ளார். தாம் தலைவியாகவும் தம் ஞானசிரியர் தலைவனாகவும்கொண்டு பாடியிருப்பினும் (ஞான நூலாகலின்) காமச்சுவை கலவாமல் பாடியிருப்பது சிறப்புக் குரியதாகும்.

நன்றி.

இப்படிப் பலவாருகச் சிறந்த இந்நூல் உரையுடன், மயிலம்–பொம்மபுர ஆதீனம் பதினெட்டாம் பட்டத்து மகா சந்நிதானத்தின் முதலாண்டுக் குருபூசை மலராக ஷை ஆதீனத்திலிருந்து வெளி வருகின்றது.

இன்று ஷை ஆதீனத்தின் பத்தொன்பதாம் பட்டமாக எழுந்தருளி அருளாட்சி நடத்திவரும் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளாகிய மகா சந்நிதானம் அவர்கள், எங்கட்கு உடனிருந்து அவ்வப்போது ஆவன அருளிவரும் திருவுளப்பாங்கால் எங்களை இந்நூலுக்கு உரை எழுதப் பணித்தருளியதோடு அதனை ஆதின வெளியீடாகவும் வெளியிட்டருளினர்கள். அவர்கள் திருவருளுக்கு என்றென்றும் யாங்கள் நன்றியுடன் கடமைப்பட்டவர்களாவோம்.

யாங்கள் எழுதிய உரையில் குறைபாடுகள் இருக்கும். அவற்றை அறிஞர்கள் காட்டின் திருத்திக்கொள்ளலாம். பொருள் விளங்கும் பகுதிகளுக்கு உரை எழுதாமல் 'பொருள் வெளிப்படை' என்றே குறிப்பிட்டுள்ளோம். தேவையான விளக்கங்களும் ஆங்காங்கே எழுதியுள்ளோம். நூலின் கருத்து என்ன என்பதைச் சுருக்கமாக அறிந்துகொள்ளவேண்டிப் பொருட்சுருக்கம் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது. தமிழுலகம் இந்நூலுரையைப் போற்றி ஆதரிக்க வேண்டுகிறோம்.

இந்நூல் அச்சேறுங்காலத்தில் மிகவும் உதவிபுரிந்த மயிலம்–ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர், வித்துவான், வே. சிவசுப்பிரமணியனர் அவர்கட்கு எங்கள் நன்றி.

விரைவில் அச்சேற்றித்தந்த விழுப்புரம் அனுமான் அச்சகத்தார்க்கும் நன்றி.

வாழ்க சேரடியாரெல்லாம்.

மயிலம், 10–10–66.

சு. குமாரஸ்வாமி ஆச்சாரியார், எம். ஏ.
ஆ. சிவலிங்கனர்.

ஸ்ரீ சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது.

பொருட்சுருக்கம்.

சிவஞானியின் சிறப்பு 1—23.

நீரினைத் தன் அடியில்கொண்டு அதனைச் சாறு என்ற பேர் கொள்ளச்செய்து மக்கள் வந்து துய்க்கும்படித் தரும் கரும்புபோலத் தன் திருமுடிக்கண் அன்பர் ஆட்டும் நீரைக்கொண்டு அருளென்ற பேரால் நாம் தலையால் இறைஞ்சக்கொடுக்கும் தருவாவான்; தன்னுடைய ஒளிவடிவத்தைப் பிறர்க்கு உணர்த்தவேண்டி சிவநிலையில் பூண்ட பாம்பை ஒளித்துவந்த மாணிக்கம்; தேவர் கூட்டத்தை வஞ்சித்து முதலில் விடம் தோற்றுவித்துப் பின்னர்த்தோன்றிய அமுதம்போலில்லாமல் விடம் கலவாத இனிய அமுதம்; மானையும் மழுவையும் மறைத்து எம் ஆணவ மாயை ஆகியவை மறையும்படி வந்த தலைவன்; சிவ நிலையில் உடுத்திருந்த நினைவால் இப்போதும் புலித்தோலாசனத்திருந்து வாழும் அரசு; அவித்தையை ஒழித்து, உடம்பு நீயில்லை என்று விலக்கி என்னைத் தானாக ஆக்குபவன்; தன்பால்வரும் மக்களுக்குப் பொன்னை வழங்கித் தன்னையே எனக்கருளும் தலைவன்;........மக்கள் நடத்தச் செல்லும் தேரில் செய்து வைத்த பாகனாகிய பதுமைபோல் மனையறத்தில் எம்மை நிறுத்தித் தானியக்குபவன்; தேவர் மேன்மையும் எம் கீழ்மையும் தோன்றாதிருக்க மனித வடிவைக் கொண்டுவரும் நம்பன்; சிவபிரானே நேரில் வந்தாலும் அவனையும் திருநீற்றையும் இகழும் சமணர்களும் வந்து வணங்கும் திருவடியுடையவன். புழுவரித்த பயிர்போல் ஐம்புலங்களால் துன்புறும் எனக்கு உற்றதுணையாவான்; எலும்பில் உயிர் சேர்த்ததுபோல் என்னுளத்து அன்பாக்கினான்;.............. விண்ணவர் அமுதுண்ணுவதற்காக விடமுண்ட திருவருள் சிறிபது என்னும்படி எங்கள் இருவினைகளும் இறப்பும் பிறப்பும் நீங்கப் பிறந்தவன்; கயிலையிலிருந்த காட்சிபோல் மயிலமலைமீதிருக்கும் வள்ளல்; மனிதவடிவினன் என்றாலும் ஞானமில்லாதவராலும்

"இவன் மேலான கடவுள்" என்றுணரப்படுபவன்; பாவி முதலிய வர்க்கும் அருள் புரிபவன்; சான்றோர்க்குத் தோன்றுத்துணையாகித் தோன்றும் துணையுமாகி அருள்பவன்; அறுசமயங்கட்கப்பாற் பட்டவன்;

தசாங்கம் 24—51.

கருணையாகிய மலையுடையவன்; ஆனந்தமாகிய ஆறு உடைய வன்; மும்மாயையாகிய நாடுடையவன்; விடயக்கள்வர் உறுத உள்ளம் என்ற ஊருடையவன்; பாடலாகிய மாலையுடையவன்! வேத மாகிய குதிரையுடையவன்; ஞானமாகிய யானையுடையவன்; விட யாகிய தருமக்கொடியுடையவன்; நாதமாகிய முரசுடையவன்; தோற்றமுதல் ஐந்தொழிலும் செய்விக்கும் ஆணையுடையவன்; சிவஞான தேவன் என்ற பேருடையவன்;

பவனி வருதல் 52—92.

அவன் திருவெண்ணீறு புனைந்து உருத்திராக்கம் பூண்டு, கல்லாடை இடையில் காட்சிதர, மனத்தைமறிப்பார் முதலிய பல் வேறு அடியார்கள் பக்கங்களிற் பரந்து சூழ்ந்துவர, பல்வேறு வாத்தி யங்கள் கடல்போல் ஒலிக்க, திருச்சின்னங்கள் "அருளுடையான் வந்தான்......சிவஞானி வந்தான்" என்பனவாக ஆர்ப்பரிப்ப, கவரி கள் வீச, ஆலவட்டம் பக்கத்தே அசைந்துவர, வெண்குடை மேலே நிழற்ற, அன்பர் கூட்டம் மழைபோல மலரைத் தூவ, 'அறியா இன் பம் அருள்பவனே!... அமுதமே!... தேவே!' என்றெல்லாம் வந்தி யர் துதிப்ப, பிரமன் மால் இந்திரன் முதலிய தேவர் புகழும்படியாகப் பவனி வந்தருளினன். ஞானநிலையில் பலவகைப்பட்ட பிரிவினர் மனமகிழ்ந்து உடன் சென்றனர்கள்.

பவனி கண்டவர்கள் 93—114.

சிவனுகிய தனக்கேயுரிய சிறுப்பணிகளாகிய பாம்பு முதலியன நீத்து, யாவர்க்கும் பொதுவாகிய திருநீறணிந்து வந்த சங்கரனும், நதிகளாடிச் சருகுகளையுண்டு வருந்தித் தவம் கிடப்பினும் காணற் கரியனுய் நாம் காணற் கெளியனுய் வந்தவனும்... மயிலைமலைத் தேனுக விளங்குபவனும் ஆகிய அந்தக்கருணாலயனை எதிரே கண்ட வர்கள் பல மகளிர்கள். அவர்கள், விழுந்து வணங்குவார்; 'இக் காட்சி நம் முன் வினைப்பயன்' என்பார்; அடி முதல் முடிவரையும்

கண்ணுடையவர்போலக் கண்ணீர் வெள்ளம் பாய நிற்பார்; 'நீர் கொண்ட எம் உடைகளைத் தந்து காக்க' என்பார்; 'எம்மை எமக்கு அருள்க' என்பார்; "இப்பிறப்பில் நின்னை அணையமாட்டேம் என்று லும் அடுத்த பிறவியில் நீ நான் என்ற பேதமிராதபடி அணைவோம்" என்பார்; 'இவ்வுடம்பில் இருந்து வாழ்ந்தது போதும் இனி இறந்தா லும் நல்லதே' என்பார்; எங்கும் நீயே! என்பார்; 'என் சொற்கு இசைவாயோ' என்பார்; 'ஆசையால் நாம் இவரைப் புணர்ந்து இன்புறலாமே தவிர இவர் நம்மைப் புணர்ந்தின்புறுர்' என்பார்; 'நாம் புணரச்சென்றுல் நீங்குவான் ஆதலால் நினையாமல் இருந்து விடுவதே நல்லது' என்பார். மறைவாக இவர் வடிவம்கண்ட நாளி லிருந்து எங்கட்கு இரவு பகல் இல்லை' என்பார்; 'அரிதாக மனிதப் பிறப்பெடுத்ததன் பயன் வீணே மனமதனுல் கெட்டுவிடுவதோ' என்பார்; 'சிவஞானதேவே நின் உள்ளம் சிலையோ' என்பார்;......... 'நீ எம்மைப் புணரின் நின்னை விகாரி என உரைப்பவர் யாருமிலை' என்பார்; 'இவ்வுலகில் சிவஞானி கோலத்தைவிட்டுப் பழைய எலும்பும் தோலுமுடைய சிவனுக வந்தால் இவரை யாவர் விரும்பு வார்' என்பார்;

தலைவி தன்னிலை கூறல் 115—131.

இப்படியாக உலாக்கண்ட மகளிர் நெருங்கிச் செல்ல, யானும் உடனே செய்த தவங்கள் செலுத்தச் சென்று வணங்கினேன்; அர்ச்சுனன் வில் தழும்பு படாத்தலையும், தண்ணிய நுதலும், ஒத்த விழி யிரண்டும், அசுவதார் கம்பளதரர் ஆகிய இருவரை விடுத்த திருச்செவியும், இயற்பகையாரிடம் மனைவிவேண்டி யிரந்துசொன்ன சொல்லைவிட்ட அழகிய வாயும், ஆலம் நீக்கிப் பாலருந்துமிடறும், மங்கலமான புயமும், பன்றி மருப்புநீக்கிய மார்பும், பிரமகபாலம் நீக்கிய கரமும், புலித்தோலுடை நீக்கி நூலாடையுடுத்த மருங்கும், சிறிய திருவடியும் ஆகிய உறுப்புகளை என்கண் களிப்பக்கண்டேன்; மிகவும் அவர்பால் காதலானேன்; மாலான மகளிர்க்குத் தோலாத விரத்தோற்றமுடைய சிவஞான தேசிகன், பலமகளிர் ஊண், உடை, பூண் முதலிய துறந்து ஏங்கிநிற்க, கீழ்ப்பட்ட நாயேன்பால் மிக்க அருள் செய்து திருக்கடைக்கண் சேர்த்தான்; அப்பெருமானை அன்று முதல் அணைதற்கு விருப்புற்றேன்.

நெஞ்சினைப் புகழ்தல் 132—172

"நெஞ்சமே! எனக்குத் துணை நீயன்றி வேறில்லை; நீ புனித முறவே வேதாகமங்கள் விதிக்கின்றன; எண்வகை யோகங்களும் உன்னை வயமாக்கவேயாம்; போகம், தவம், கல்வி, நட்பு, வன்மை, ஈகை முதலிய வறத்துக்கு நீயே துணை; போகிகளைத் துறவிகளாக்கு வாய்; துறவிகளைப் போகிகளாக்குவாய். அறத்தை மறமாக்குவாய்; மறத்தை அறமாக்குவாய்; 'நின்னை ஒடுக்குவது முத்தி, விடுப்பது பந்தம்' என நிற்பாய்; நீ புலன்வழிப் பரந்துசென்றாலும் தீதுண்டோ? நீ விரும்பின் முத்தி ஒரு கணத்தில் வரும். சிவபிரான் ஏதேனும் ஒரு வடிவுடன் வரச்செய்வாய் ;

சுந்தரர் முதலையுண்ட பிள்ளையை வரச்செய்ததும், அப்பர் கல் மிதப்பச் செய்ததும், சம்பந்தர் எலும்பு பெண்ணாக்கியதும், திருநீல கண்டர் மனைவியைச் சூளூற்றுத் துறந்ததும், இயற்பகையார் சிவ பிரானுக்கு மனைவியை யீந்ததும், சிறுத்தொண்டர் பிள்ளையை யரிந்து படைத்ததும், இளையான்குடிமாறனார் இருளில் நென்முளைவாரச் சென்றதும், மானக்கஞ்சாறர் மகளின் கூந்தலையரிந்து கொடுத்ததும், ஏனாதிநாதனார் பகைவனைத் திருநீறுகண்டு வணங்கியதும், மெய்ப் பொருள்நாயனார் பகைவன் தன்னைக் குத்தியும் அவனுக்கு ஊறு விளையாதபடித் 'தத்தனே! காக்க' எனச் சொன்னதும், சிவகாமி யாண்டார்க்காக எறிபத்தநாயனார் யானையை எறிந்ததும், விறல் மிண்ட நாயனார் சுந்தரர் மூலம் திருத்தொண்டத்தொகை நூல்பெற்று உலகம் உய்யுமாறு அவரை வெகுண்டதும், நீலநக்கராகிய வேதியர் தாழ்ந்த குலத்தவராகிய யாழ்ப்பாணருக்குத் தங்க யாகசாலையை இடமாகக் கொடுத்ததும், குங்கிலியக்கலயர் இறைவனுக்குக் குங்கி லியம் முட்டாமல் கொள்ள முயன்றதும், மூர்க்கநாயனார் சூதாடிய பொருளை அரனடியார்க்குதவியதும், அமர்நீதியார் கோவணத்துக்கு நேராகத் தன்னைக் கொடுக்கத் துலையில் நின்றதும், கலிக்கம்பர் தம் மனைவியார் கையைத் துணித்ததும், கண்ணப்பர் காளத்தியார்க்குத் தசையை உண்ணப்ப என்று ஊட்டியதும், அதிபத்தர் முதலிற்பிடித்த பொன் மீனை மீளவும் ஆற்றில் விட்டதுவும், சேரமான்பெருமாள் நாயனார் வண்ணானைத் தொண்டர் என்று பணிந்ததுவும், திருக்குறிப் புத்தொண்டர் கல்லோடு தலையை மோதிக்கொண்டதுவும், கோட் புலியார் தன் கிளையைக் கொன்றதுவும் ஆகிய இச்செயல்கள் எல்லாம் நின் இசைவினாலே நிகழ்த்தியனவாம்; நீயில்லாமல் இவை

நிகழ்த்துதல் அறமில்லை; நின்பெருமையார் பேச அறிவார்? நீ என்னோடு கூடில் என்பெருமை சொல்வாரும் இல்லை; நீ பிறவிக் கடற்குப் புணையாகப் பிடிக்கப்படுவாய்; மறந்தால் அதிலேயே அழுத்த வல்லாய்; விலங்கினும் மனிதர்க்குச் சிறப்பு வந்தது நின்னாலன்றோ ? முனிவார்க்கும் பெருமை நின்னை நினைத்துக்கொள்வதாலேயே; ஆதலால் எனக்குத் துணை நீயே.

வேண்டுகோள் 173—175.

என் மனமே எங்கும் உனக்கு அருமையுடையது ஒன்றுமில்லை; ஆதலால் சிவஞானிபால் தூதாகச் சென்றுவர உனை வேண்டுவேன்; வேதமாகிய கிளியைத் தூதாகவிடின், சிவஞானியைக் காண்டலரிது; கண்டாலும் ஒன்றாக ஓதாமல் பலபடியாக மயங்குமாறு உரைக்கும், ஆதலால் எனக்காகத் தூது சென்றாலும் நீதான்; செல்லாதிருந்தாலும் நீதான். வேறு தூது எனக்கில்லை.

சிவஞானி தங்குமிடங்கள் 176—203.

என்னைப்பெற்ற தாய்போன்ற நெஞ்சமே! அவன் இருக்குமிடங்களைச் சொல்வேன் கேள்; காசி என்ற ஊர்ப்பெயர் இடையில் 'ஞ்' என்ற எழுத்திட்டதான காஞ்சி என்ற ஊர் ஒன்று. அதன் பெருமையை, 'முருகன் கால்கூறும் விநாயகன் அரைக்கூறும் உமையம்மை முக்காற்கூறும் சிவபிரான் முழுக்கூறும் உரைப்பர் என்றால் என்னால் எப்படிச் சொல்லமுடியும்' என்று நினைத்த ஆதிசேடன் வெட்கமுற்றுக் கடலின்கீழ் விழ்ந்தான்; திருமாலும் அதன் பெருமையைச் சொல்லமுடியாதவனாய் அப்பாம்பின்மீதே கிடந்தான். இத்தகைய பெருமையுடையது காஞ்சி நகரம்.

விருத்தாசலம் என்பதும் ஓர் இடம். தன்பால் வந்து இறப்பார்க்கு முத்தி தருவது; அச்செயலைப் பின்னர்த் தோன்றிய காசி என்ற நகரம் திருடிக்கொண்டு வடக்கே சென்றிருந்தது. அக்காசியைச் சென்று சேர்ந்தது கங்கை என்ற ஆறு. அக்கங்கையும் மணிமுத்தாறு என்ற நதிக்குப் பிற்காலத்ததே. ஆதலின் தானே பழைய ஆறு என்று எண்ணும் மணிமுத்தாறு சூழ்ந்தது அந்த விருத்தாசலம்.

சேயூர் என்ற ஊரும் அவன் இடம். அவ்வூர் வயல் வளம் மிக்கது; உணவுக்குச் சுவை தருதலின் 'சுவை' என்றே பெயர் பெற்ற உப்பு விளைவது; சகோரப்புள் நிலவொளிக்குப் பதில் மகளிர் முறுவல் ஒளியுண்ணும் தகுதியது. பொய்கைகள் மிக்க ஆழமுடையவை; அங்கே மறையவர் முத்தீ வளர்ப்பர்; அவர் மனைவியர் பசித்தீயை விருந்தினால் அவிப்பர். அவ்வூர் பிறரை வருத்துதல் இல்லை; அங்கே துவளுதல் என்பதும் இல்லை. தேர் ஓட்டம் தவிர ஓடுதல் என்பதில்லை; அவ்வூரார் ஏற்பார்க்கு ஈயக் காத்திருப்பர்; இல்லை, கொடு என்ற சொற்கள் இல்லை. எக்காலத்தும் விழாவுடன் கூடியது அவ்வூர்.

மயிலம் என்ற ஊர் சிவபிரானின் மந்திரமாகிய பஞ்சாட்சரமானது ஒருமுறை ஓதப்படின் ஆயிரமுறை ஓதியதின் பயனைத் தருவதாகும்.

பிரமமாகிய சிவஞானி வாழ்தலின் பிரமபுரம் எனப்பெயர்பெறும் பொம்மபுரம் என்ற ஊரும் உண்டு. இவ்வூர்களுள்,

சேர்தலாகா இடம் 204—215.

ஸ்ரீ சிவஞானியாருக்கும் இடம் தேடிப் போகும் வழியில் உலகாயதன், கருமகாண்டி, நியாயன், வைசேடியன், புத்தன், பாஞ்சராத்திரி, யோகி, வாமி, சாங்கியன், முதலிய பிறசமயத்தவர்கள் சொற்கேட்டுத் தடைபடாமல் நேரே பொம்மபுரத்துத் திருமடம் செல்க.

பொம்மபுரத்துச் சிறப்பு 214—223

அங்கே அரிசி கழுவிய நீர் ஒரு பெரிய தடமாய்த் தேங்கி அதில் கழுநீர்ப் பூக்கள் பூக்கும்; அட்டிற் புகையானது மேகமாகச் சென்று மூவுலகும் காக்கும்படியாகும். கோடி மறையவர்க்கு இடும் உணவின் புண்ணியத்தை ஒரு சில யோகிக்கு இடும் உணவால் அடையலாம்; அந்த நிலையில் கோடி சிவயோகிகட்கும் அங்கே உணவு சமைப்பவர் உண்டு; அவர்களைக் காண்பாய்; சிவனடியார்களுக்குப் பூசனைக்கு வேண்டிய பொருள்கள் தருவாரும், நறுமலர்கொய்து வருவாரும், பூசை செய்வாரும், ஞானநூல் கேட்பாரும், உருகி அந்நூலை ஓதுவாரும், நீறணிந்து கண்டிபுனைந்து கமலாசனத்திருந்து

சிவனைச் சிந்திக்கும் யோகியரும் ஆகியவர்களை நீ பார்த்து மனமுருகிப் போற்றி வணங்கித் திருமடத்தின் உள்ளே புகுவாயாக.

தூதுசொல்ல வேண்டுதல் 224—255.

அங்கே சிவஞான தேவனைக்கண்டு ஓடி, அவன் திருவடியில் வீழ்ந்து, அன்பு தேங்கி, "அமுதனே! வேண்டுவார் வேண்டுவன உதவுபவனே! பச்சைக்கந்த மரபில் வந்தவனே! வீடுதவும் வித்தகனே! என்றெல்லாம் விளித்து வணங்கிப் பின் வருமாறு கூறுக. "சிவஞான தேசிகனே! நின்பேரருளே துணை; நினது திருப்பவனியை நேர்ந்துகண்டநாளிலிருந்து எம் தலைவியானவள் கனலிலிட்ட மெழுகாய்க் கரையும்; நீர்வார் கண்ணெடு எங்கும்; இரவு பகல் அவட்கு இல்லை; உண்ண உடுக்க விருப்பமில்லை; நினைப் பண்ணெடுபாடும், மெய்பதைக்கும்; நினை எங்கும் தேடும்; உருகும், அலறும்; வாடும்; 'எனை அவன் பாரானே' என்னும்; 'பரம சிவஞானி வாரானே' என்னும்; வரும் வழிபார்க்கும்; புலம்பும்; என்னை நின்பால் தூதுவிடப் பலவாறு துன்புறும்; தன் உடம்பும் போஜறயாகக்கருதி அதைவிடத் துணியும்; குடும்பத்தைப் பகை எனக் கருதும்; ஒரு பொருளும் இல்லாத வெற்றிடத்தில் பூரணமாக நிறைந்து பொருந்தித்தான் நீ என்ற வேறுபாடின்றியிருக்க விரும்பும்; அத்தகைய என் உயிராகிய தலைவியை, 'கல்வியால் காணமுடியாத காட்சியாகிய சிவஞானதேவ! நீ புல்லுவாயாக; அவ்வாறு அவளைப் புல்லுமளவும் உன்னைவிட்டு நான் போகமாட்டேன்' என்று இப்படியாகச் சொல்லிச் சிவஞானியின் மாலையை வாங்கி வருக.

உ
சிவமயம்
சிவத்திரு சிவஞான பாலய தேசிகன் திருவடி வாழ்க.

சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது

காப்பு

கைக்களிற்றை யன்றுரித்த கண்ணுதலோ னீன்றதனி
மெய்க்களிற்றை நெஞ்சமே மேல்கொண்டு—புக்குருக்கி
மேவன்பாற் றூதாகு மேனிச் சிவஞான
தேவன்பாற் றூதாகச் செல்.

பொருள்: நெஞ்சமே! நீ, கையையுடைய யானையாகிய கயமுகாசுரனை முன்னாளில் தோல் உரித்து மேலாடையாகப் போர்த்துக்கொண்ட நெற்றிக்கண்ணுடைய சிவபிரான் உலகுக்கு அளித்த ஒப்பற்ற உண்மைவடிவான களிருகிய விநாயகப்பெருமானை நினைத்துக்கொண்டு, சுந்தரமூர்த்திகளின் அறிவிற் புகுந்து மனதை யுருக்கி அவர்பால் எழுந்த அன்புகாரணமாகப் பரவையார் மனைக்குத் தூது சென்றதான திரு உருவத்தையுடைய சிவஞான தேவனிடம் தூதாகச் சென்றுவா.

விளக்கம்: குருவடிவைச் சிவமாகவே கருதவேண்டும் என்பது சமயக்கோட்பாடாதலின் ஈண்டுச் சிவபிரான் செயலாகிய பரவை மனைக்குத் தூதுபோயதைச் சிவஞானியின் செயலாகக் கூறினார். நூலில் "மாசுணத்தைத் தான் ஒளித்த மாணிக்கம்" என்பது முதலியவாக வரும் இடங்களிலும் இப்படியே கொள்க.

நூல்

சிவஞானியின் சிறப்பு

நீர்கொண்டு தாளாலந் நீரைத்தீஞ் சாறென்று
பேர்கொண்டு வந்தாரப் பெய்கரும்பின்—ஏர்கொண்ட

பூமுடியா னீர்கொண்டு பொங்கு மருளென்று
நாமுடியால் வீழ்ந்திறைஞ்ச நல்குதரு—காமருதன்

தேசுணர்த்த வேண்டித் திருமுடிமேல் மேவிவாழ்
மாசுணத்தைத் தாளெித்த மாணிக்கம்—நேசித்துக்

பொருள்: கண்ணிகள்: 1–3: அடிப்பகுதியால் உழவர் இறைக்கும் நீரை உறிஞ்சிக்கொண்டு அந்நீரைப் பின்னர் இனிய சாறு என்ற பெயர் கொள்ளச்செய்து உழவர் தன்னிடம் வந்து நிறையப் பெறுமாறு பெய்கின்ற கரும்பினைவிடச் சிறந்த அழகு கொண்ட அன்பர் இடும் பூக்களையுடைய முடியால் அவர் செய்யும் அபிடேக நீர்கொண்டு, பின்னர் அதை மிக்க அருள் என்ற பெயர் கொள்ளச்செய்து அன்பர்களாகிய நாம் வீழ்ந்து தலையால் வணங்கக் கொடுக்கும் தரு; அழகிய தனது ஒளிவடிவை உணர்த்தவேண்டித் தன் திருமுடிமேல் பொருந்தி வாழ்கின்ற பாம்பை ஒளித்துவந்துள்ள மாணிக்கம்;

விளக்கம்: கரும்பின்–இன்–உறழ்பொருள். கரும்பு அடியால் நீர்கொண்டு அளிப்பது; சிவஞானி முடியால் நீர்கொண்டளிப்பன். கரும்பு அடிப்பகுதியில் இனிமை மிகுத்தும் மேல் செல்லச்செல்ல இனிமை குறைத்தும் தருவது; சிவஞானி வடிவம் முழுவதும் அருள் மயவாக விளங்கியருள்பவன். கரும்பு வணக்கச் சாறு தருவது; சிவஞானி வணங்க அருள் தருபவன். கரும்புக்கு ஏற்பத் தரு என்றார். மாணிக்கத்தை ஒளித்த மாசுணம் உண்டு; அதற்கு மாறாக மாசுணத்தை ஒளித்த மாணிக்கம் என்றதன் சிறப்பைக் காண்க. மாசுணம் அணிந்த சிவன் அதனை மறைத்துச் சிவஞானியாக வந்தான் என்றவாறு.

கொள்ளு மடியார் குழாத்தினைத்தான் வஞ்சித்திங்
கெள்ளும் விடங்கலவா வின்னமுதந்—துள்ளும்

ஒருமான் மழுவோ டொளித்தெமைமுன் பற்றும்
இருமான் ஒளிக்கவரும் எம்மான்—பெருமான்

உடுத்திருந்த வாசனையால் ஓங்குபுலித் தோல்மேல்
அடுத்திருந்து வாழு மரசு—தடுத்திருந்த

---

4. (பொ.) அன்பு செய்து தம்மை இறைவனுக்கு ஆட்படுத்திக்கொள்ளும் அடியவர் கூட்டத்தை வஞ்சித்து இகழும் விடத்தோடு பொருந்தாத இனிய அமுதம்.

(வி.) பாற்கடலைக் கடைகையில் அமுதம் தோன்றும் என்று எதிர்பார்த்த தேவர்களை வஞ்சித்து விடமானது முதலில் தோன்றிப் பின்னரே அமுதம் தோன்றியது என்பதை யுட்கொண்டு சிவஞானியாகிய அமுதம் விடம் கலவாதது என்றார்; சிவஞானிக்கு அடியவரை வாழ்விப்பதன்றி வஞ்சிக்கும் இயல்பில்லையாதலின்.

5. (பொ.) எம்மை யநாதியே பற்றிவரும் ஆணவம், மாயை என்ற இருமான்களும் தன்னைக்கண்டு ஒளிக்குமாறு துள்ளும் ஒரு மானையும் மழுவையும் மறைத்துவரும் எம் தலைவன்.

(வி.) ஆணவம் மாயை இரண்டும் பெண்ணாகச் சொல்லப் படுவன ஆதலின் மான் எனப்பட்டன. ஒருமான் இருமான்–சொல் நயம் காண்க.

6. (பொ.) சிவபிரானாகிய தான் கயிலையில் இருந்தபோது புலித்தோலுடை யுடுத்தியிருந்த நினைவினால் இவ்விடத்தும் உயர்ந்த புலித்தோல் ஆசனத்தின்மேல் தங்கியிருந்து வாழும் அரசு.

(வி.) வாசனை–வாசனாமலம் – அதாவது முற்பிறப்புணர்ச்சி. ஈண்டு முன்னிலை உணர்ச்சி என்க; சிவனுக்குப் பிறப்பில்லையாதலின்.

தோன்றென் றவித்தை யொழித்திட் டுடம்பினைநீ
யன்றென் றொழித்தெனைத்தா னாக்குவான்—நன்றென்று
பொன்னை நரர்க்குக் கொடுத்துநீர் போமென்று
தன்னை யெனக்கருளும் தம்பிரான்—அன்னையெனும்

---

7. (பொ.) அவித்தையானது உயிரினது உண்மைப் பொருளையறியும் அறிவைத் தடுத்திருந்ததொரு பொருளாகும் என்று அதை ஒழித்து உடம்பினை அது உயிர் அன்று என்று சொல்லி அவ்வாறு எண்ணிய எண்ணத்தை ஒழித்தும் என்னைச் சிவமாக்குவான்.

(வி·) அவித்தை–அஞ்ஞானம்–நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவு. ‘உடம்பே உயிர்’ என்று கூறுபவர் தேகான்ம வாதிகள் எனப்படுவர். சிவமாக்குதல்–பதியுண்மையுணர்த்தி அதை யடைதற்குரிய நெறியில் நிற்கச்செய்தல். தான் ஆக்குதல்–சிவ மாக்குதல்.

8. (பொ.) அடியவராம் பிறர்க்கு நல்லது இதுவே எனப் பொன்னைக்கொடுத்து நீவிர் போமின் என்று அனுப்பி எனக்குமட்டும் தன்னையே கொடுக்கும் தலைவன்.

(வி.) தன்னைக் காணவரும் அடியவர்க்குப் பொருளுதவுதல் முதலடியிற் கூறப்பட்டது. இன்றும் இவ்வுதவியைக் காணலாம். தன்னையருளுதல்—தன்னை உணரச்செய்தல். “தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச் சங்கரா” என்றார் மாணிக்கவாசகர். தம்பிரான்–உயிர்கட்குத் தலைவன். தம் என்பது பன்மைப்பெயர்; அது உயிர்ப் பன்மையைக் குறிக்கும். தன் என்பது ஒருமை, கடவுளைக் குறிக்கும்.

உற்றான் அமுதமே யொப்பான் அருள்மேனி
பெற்றா னடியேன் பிழைபொறுப்பான்—கற்றார்
தொடுத்த தொடைக்கிசைந்த தோற்றத்தான் தன்னைக்
கொடுத்த கொடைக்குவந்த கோமான்—நடத்தலுறச்
செல்லுமணித் **தேர்மீது செய்தமைத்த பாகன்போல்**
இல்லுள் எமைவைத் தியக்குவான்—நல்ல
சுரர்மேன்மை யெங்கீழ்மை தோன்றா தொழிய
நரர்மேனி சாத்திவரு நம்பன்—தரைமேல்
மழுவேறு கையான் வரினும்நீ றெள்ளும்
கழுவே றிகளுந்தாழ் காலான்—புழுவேறு

9—13. (பொ.) வெளிப்படை.

(வி.) தோற்றம்-புகழ். தன்னைக்கொடுத்த கொடை, தன்னை எனக்கருளும் என்பது போன்றது. நடத்தலுற......இயக்குவோன்—'தேரில் பாகன் உரு அமைப்பதுண்டு; அப்பாகன் அதைச் செலுத்துவதாகக் கருத்து; ஆனால் தேரைச் செலுத்துவோர் பிறர். அது போல இல்லறத்தில் எனை நிறுத்தித் தானே அதைச் செலுத்துவன். எனவே யான் செலுத்துவது என்பது மயக்கமே' என்க.

தேவ வடிவை விட்டு வந்தமையின் சுரர் மேன்மையும், நரர் வடிவை மேற்கொண்டமையின் நரர் கீழ்மையும் ஒழிந்தன என்க. இதன் கருத்து நரரைத் தேவராக உயர்த்துவதற்குச் சிவபிரான் சிவ ஞானியாக நரர் வடிவுகொண்டு வந்தான் என்பது. கழுவேறிகள்—சமணர்கள். ஞானசம்பந்தப்பெருமானிடம் வாதில் தோற்றுத் தாமே கழுவேறியவர்கள் ஆதலின் கழுவேறிகள் என்றார். சிவனே நேரில் வரினும் மதியாது திருநீற்றை எள்ளும் சமணர்களும் சிவஞானி யைப் போற்றி வணங்குவர் என்பதாம்.

மென்பயிர்போல் வெய்ய விடயத் தரிப்புண்டு
துன்புறுவேற் குற்றதுணை யானான்—என்பிலுயிர்
ஆக்கினான் போல வடியே னுளத்தன்புண்
டாக்கினான் மாருத வானந்தம்—தேக்கினான்
நாதாந்தன் வீடுதவு ஞானவினோ தன்தெளிந்த
வேதாந்தன் கைம்மாறு வேண்டாதான்—போதாந்தன்
விண்ணோ ரமுதுண்ண வேண்டி விடமுண்ட
தண்ணா ரருள்சிறிது தானாக—வெண்ணா
விறப்புக் கடிய விருவினையோ டெங்கள்
பிறப்புக் கடியப் பிறந்தான்—சிறப்பக்
கயிலைமலை மீதிருந்த காட்சிபோல் வந்து
மயிலைமலை மீதிருக்கும் வள்ளல்—பயில
நரனென் றிருந்தாலும் ஞானமிலா தாரும்
பரனென் றறியப் படுவான்—ஒருநன்றி

---

14. (பொ.) புழுவேறிய மெல்லிய பயிர் அரிக்கப்படுதல் போலக் கொடிய விடயத்தால் அரிக்கப்பட்டுத் துன்பம் மிகுவேனுக்கு உற்ற துணையானான்.

(வி.) விடயம்-ஐம்பொறி நுகர்ச்சி; ஐம்பொறிகள்-மெய் வாய் கண் மூக்குச் செவி என்பன. அவைகள் பொருள்களோடு நுகரும் நுகர்ச்சி. அரிக்கப்படுதல்-சிறுகச் சிறுகத் துன்புறுத்தி அழிக்கப் படுதல்.

15—20. (பொ.) வெளிப்படை.

(வி.) என்பு-உடம்பு. உடம்பில் உயிரைச் சேர்த்தவனாகிய இறைவனைப்போல உள்ளத்தில் அன்பைச் சேர்த்தான் என்பது. பூம்பாவையின் எலும்பில் உயிர் சேர்த்த ஞானசம்பந்தன் போல எனினும் ஆம். வேதாந்தம்-உபநிடதம். போதம்-அறிவு. விண்ணவர்க்குச் செய்த அருள் அவர்க்கு இருவினைகளைப் போக்கவில்லையாதலின் சிறிதாக என்றார். எண்ணா என்பதை இறப்பு, வினை, பிறப்பு ஆகியவற்றுடன் தனித்தனிக் கூட்டுக. எண்ணாப் பிறந்தான் எனக்கூட்டி, 'விண்ணோர்க்கு விடமுண்டுதவிய அருள் சிறிதாகுமாறு கருதி எமக்குப் பேரருள் செய்யவேண்டிப் பிறப்புக்கடியப் பிறந்தான் எனக் கொள்ளினும் ஆம்.

பாவிக் குதாசனர்க்குப் பத்தர்க்குச் சீடர்க்கு
மேவிக் கருணைபுரி மேன்மையான்—ஆவிக்குத்

தோன்ருத் துணையாகித் தோன்றுந் துணையுமாய்ச்
சான்ருர்க் கருளுந் தகைமையான்—மூன்ருற்

பெருக்கு மிருசமயம் பேதித் தறியா
திருக்கு நிலையி னிருப்பான்—அரக்கன்

21—23: (பொ.) வெளிப்படை.

(வி.) பாவி-கடவுள் உண்மை ஒவ்வாதவன். உதாசனர்-மதிக்கவேண்டியதை மதியாதவர்; ஈண்டு மதிப்புக்குரிய வீர சைவ சமய நெறியைப் பொருட்படுத்தாத பிற சமயத்தாரைக் குறிக்கும்.

பத்தர்-திருநீறு, அக்கமணி, ஐந்தெழுத்துடையவனுய் இலிங்க தாரணம் உள்ளவன். "நலங்கொள் பூதி நயனத் திருமணி, அலங்கல் மேனி யணிந்து புனிதனுய்ப், புலங்கொள் அஞ்செழுத் தொண்மனுப் போற்றும், இலிங்கதாரணன் பத்தன் எனப்படும்" என்று சித்தாந்த சிகாமணியில் ஆசிரியர் கூறியது காண்க.

சிடர்-பத்தர்க்குரிய இலக்கணங்களோடு குருவருள் உடையவராயும் அவரருளால் விட்டின்ப விருப்புடையவராயும் விளங்குபவர்.

"பிரமமே வடிவமாகுமப் பெரியவன் தன்னுல், அருள்புரிந் தளிக்கப்படுவோன் அவனருளால், பரமவின்ப விடவா வுளோ னெவனவன்பகரில், இருமை தங்கிய சிடனென் றுயர்ந்தவர் இசைப்பர்" என்று ஆசிரியர் கூறியது காண்க. மேவிக் கருணைபுரிதலாவது அவரறிவிற் பொருந்தியருளல். சூரியன் காண்பார் கண்ணிலும் காணப்படும் பொருளிலும் பொருந்திக் காட்டுதல்போல என்க. இது காணும் உதவி காட்டும் உதவி எனப்படும். பாவிகட்குக் கடவுள் உணர்வை யுண்டாக்குதலும் உதாசினர்க்குத் தம் சமயத்துப் பற்றுண்டாக்குதலும், பத்தர்க்குப் பெத்த நிலையிலிருந்து முத்த நிலையில் விருப்புக்கொள்ளச் செய்தலும், சிடர்க்கு அவர் விரும்பும் முத்தி நிலையை எய்தற்குரிய நெறிகளில் நிற்கச் செய்தலும் கருணைபுரிதலாகக் கொள்க. தோன்ருத்துணையாம் இறைவனே குருவடிவில் வந்தான் என்று கொள்ளுதலின் 'தோன்ருத் துணையாகித் தோன்றும் துணையுமாய்' என்ருர். அறுசமயம்-புறச்சமயம் ஆறு.

தசாங்கம்

1. மலை

மலையா நிலையாகி மத்தாகி யாழி
யலையாத தாயளப்ப தன்றிச்—சிலையாய்ப்

பொறுப்ப திலதாய்ப் பொறையருவி தூங்கி 25
வறப்பினும் நல்கும் வளத்தாய்ச்—சிறப்ப

வணியார் கொடையாகும் ஐந்தருநற் சிந்தா
மணியார் **கருணை மலை**யான்—கணியா

24—26. இதுமுதல் தசாங்கம் கூறுகின்றார், முதலில் மலை கூறுகின்றார்.

(பொ.) அரக்கனாகிய இராவணனால் அசைக்கப்பட்ட கயிலை போல் இல்லாமல்) ஒருவராலும் அசைக்கமுடியாத நிலையுடையதாய் (மந்தரமலைபோன்று) மத்தாகிக் கடலைக் கடையாததாய் (மற்றைய மலைகள் அளக்கப்படுதல்போல்) அளப்பதற்கு அளவில்லாததாய், (மேருமலை இறைவனால், திரிபுரம் எரிக்கச்சென்ற காலத்தில் வில்லாக வளைத்துப் பிடிக்கப்பட்டதுபோல்) வில்லாக வளைத்துப் பிடிக்கப்படாததாய்ப், பொறையாகிய அருவியொழுக, மழை வறந்த காலத்தும் தன்பால் உள்ள உயிர்களுக்குச் சுரந்தூட்டும் வளம் உடையதாய், மிக அழகிய கொடை பொருந்திய ஐந்து தருக்களையும், சிந்தாமணியையும் ஒத்த கருணையாகிய மலையையுடையவன். சிவஞானி கொண்ட கருணைமலை மற்றைய மண்மலைகள்போல் இல்லை என்பதாம்.

(வி.) ஐந்தரு: கற்பகம், சந்தானம், அரிச்சந்தானம், பாரிசாதம், மந்தாரம்.

ஆறு

வறிவாங் குறிஞ்சியினின் ருங்கெழுந்து காமச்
செறிவாங் கொடும்பாலை தீர்த்து—மறியாத
மாயையெனு முல்லை வளர்பசுக்கொண் டைவரெனு
மாய ருறுதொழிலை யாங்ககற்றிப்—பாய
விடய மெனுங்குளங்கள் வேறுவே றுகா
துடைய வுடைத்திட் டுளமென்—றடையு
மருத நிலநிறைந்து வாள்விழியா நெய்தல்
பெரிது பெறவந்து பெருகிக்—கருதிலொரு
தானந்த லின்றித் தலம்விசும்பு போர்த்துவரும்
ஆனந்த மென்னுமலி **யாற்றினான்**—ஞானம்

நாடு

பயனாக வோர்முப் பகுதியுயிர் வாழ
நயனாகு மும்மாயை நாடன்—வியனாக

27—31. (பொ.) அளவிடப்படாத அறிவாகிய மலையினின்றும் புறப்பட்டுப் பலவாகச் செறிந்த காமமாகிய பாலைவனத்தையழித்து, மடங்காத மாயை என்ற முல்லை நிலத்தில் வளர்கின்ற பசுவைக்கொண்டு, ஐம்பொறிகள் என்ற ஆயர் செய்யும் தொழிலை நீக்கிப் பரவிய விடயங்களாகிய குளங்கள் வேறு வேறாகத் தெரிதலின்றி அழியும்படி அழித்து, மனமாகிய மருத நிலத்திலே நிறைந்து, ஒளிமிக்க விழிகளாகிய நெய்தல் மலர்கள் மிக்க அழகுபெற வந்து, பெருக்கெடுத்து, நினைக்கின் தானொரு கெடுதலும் இன்றி நிலத்தையும் விசும்பையும் போர்த்து வருகின்ற தன்மை நிறைந்த ஆனந்தமாகிய ஆற்றை யுடையான்.

(வி.) செறிவுக்காமம் என மாறுக. ஆற்றுக்கு மலை பிறப்பிடமாவதுபோல் ஆனந்தத்துக்கு அறிவு பிறப்பிடம். ஆனந்தம்–அறிவின் தெளிவில் தோன்றும் இன்பம்.

32. (பொ.) பெற்ற ஞானம் பயன்படும்படி மூவகையுயிர்களும் வாழ்தற் கிடமான நல்ல மூன்று மாயைகளாகிய நாட்டையுடையவன்.

(வி.) மூவகையுயிர்: விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என்ற நிலையில் உள்ள உயிர்கள். மும்மாயை: சுத்த மாயை, அசுத்த மாயை, பிரகிருதி மாயை. நயனாகும் மாயை என்றது, உயிர்க்குத் தனு (உடமபு) கரண (கருவி) போகங்களைத் தந்து அறிவுண்டாகும்படிச் செய்வது மாயையே யாதலின்.

ஊர்

வின்ளலரு மன்பர் விடயக் கரவரு'ற
வுள்ளமெனும் நன்கமைந்த வூருடையான்—தெள்ளுதமிழ்ச்

மாலை

சொல்லா மலரைச் சுவையா மதுவொழுகப்
புல்லா வழுச்சொலெனும் புன்மையெலா—மில்லாமல்

புன்புலவ ராங்குரங்கு போற்றுப் பெருமையுற
வின்புலவ ராஞ்சுரும்பார்த் தீண்டிவர—வன்பெனுமோர்

வீடாத நார்கொண்டு மென்னு வெனுங்கரத்தால்
வாடா வகைபுனைபா மாலையான்—பீடார்

குதிரை

மலரா லயனுர் மனச்சாலை நின்று
நலநா மணிவாய்த னண்ணி—நிலனுக

---

33. (பொ.) பெருமையுண்டாக அளவிடமுடியாத அன்பை யுடையவரது விஷயங்களாகிய கள்ளர்கள் சாராத உள்ளம் என்ற நன்கு அமைந்த ஊரையுடையான்.

(வி.) கரவர் உறுமையின் ஊர் நன்கமைந்ததெனப்பட்டது.

34—36. (பொ.) வெளிப்படை.

(வி.) தமிழ்ச்சொல் மலராக அன்பு நாராக நாவேகரமாகப் புனைந்த மாலை என்க. மலரை ஒழுக, இல்லாமல் புனை பாமாலை என்றும் கூட்டுக. "குரங்கு கையகப்பட்ட பூமாலை" என்ற பழமொழியை நினைவு கூர்க. விடாத-அழியாத. நாவிற்கு மென்மையாவது யான் எனது என்னும் தடிப்பில்லாமை.

37-39. (பொ) தாமரை மலரை ஆலயமாகவுடைய பிரமன் மனமாகிய சாலையிலிருந்து நாவாகிய அழகிய வாயிலில் புகுந்து வானை நிலமாகக்கொண்டு ஓடி எழுதமுடியாத அழகியதாய், அனு

வானிடையே யோடி வரையா வழகுடைத்தாய்த்
தானனுமா னிப்பினுயர் தன்மைத்தாய்—ஞான
நிறையா மரபு நிலேவழா தோங்கு
மறையா மரியபரி மாவான்—குறையாத

யானே

தத்துவமாஞ் சேனே தனேத்துரந்திட் டாணவமாய்
வைத்த தளேயின் வலியறுத்து—மெத்து
வினேயாம் பணேயொடித்து வீட்டியெழுந் தோடு
மனமாம் பரிமாவை மாய்த்துத்—தனிமாரன்
கன்னன் முரித்துக் கருந்தோலாற் போர்த்திருந்த
துன்னுநிண மென்புதசை சோரிகுடர்—என்ன
வளந்தறிவ வெல்லா மழிந்துபுறந் தோன்ற
விளங்கிழையார் தம்மை மிதித்துத்—துளங்கு
சமயமாம் பொய்க்குழியிற் சார்ந்துவிழா தோடி
யமையுமா னந்தநீ ராடிச்—சுமையலா
வேதா கமமாம் விளங்குமணி தாங்கிவரும்
ஆதார மாஞான வானேயான்—மாதேவன்

மானித்து உணரின் உயர்ந்த தன்மையுடையதாய் ஞானம் நிறைந்து மரபு நிலேவழுவாது உயர்ந்து விளங்கும் வேதமாகிய அரிய குதிரை யுடையான்.

(வி.) நாவுக்கு நலம் தீச்சொல்பயிலாமை. வானிடையோடு தல் காற்றில் ஒலியாகப் பரவுதல். மறை எழுதாக்கிளவியாதலின் வரையா அழகுடைத்து என்றூர். அநுமானித்தல் காரண காரியங் கொண்டு உணர்தல். அனுமானத்தால் மறை குதிரைகளின் உயர்வு உணரலாம். மறைக்கு ஒலி முதலிய மரபு; குதிரைக்கு அங்கம், கதி முதலிய மரபு.

40—45. (பொ.) வெளிப்படை.

(வி.) தத்துவம் முப்பத்தாறு. வினே நல்வினே தீவினே. பணே-கிளே; வீட்டி-வீழ்த்தி. கட்டுக்கடங்காத மனம் ஆதலின் ஓடுமனம் என்றூர். கன்னல்-கரும்பு. ஞானம் தோன்றின் காமம் அழியும்

கொடி

சங்கர ஞதியிறை தாணுவெனும் பேருடைய
கங்கரனே யாதி கருத்தாவாம்—அங்கணனை
யேத்தி யடியி னிடந்து விழிக்கமலம்
சாத்தி முடிவணங்கிச் சக்கரமொன்—றீத்தருள்செய்
யென்றுபெறு மான்முதலோ ரெல்லாம் பசுவென்று
மன்றமுறக் கட்டுதரு **மக்கொடியான்**—என்றும்

முரசு

அடியா தெழுமொழியா யானந்த மாகி
முடியாத **நாத முரசான்**—கடியார்மென்

ஆதலின் மாரன் கன்னல் முரித்து என்றூர். சோரி-குருதி. தோன்ற என்பதற்கு "தோன்றுமாறு மிதித்து எனக் காரியப்பொருளிலும், 'தோன்றிய காரணத்தால் மிதித்து' எனக் காரணப் பொருளிலும் யானைக்கும் ஞானத்துக்கும் முறையே கொள்க. விளங்கிழையார் தம்மை மிதித்தலாவது பெண்ணின்பால் எழும் காமத்தையழித்தல். துளங்குசமயம்-நிலைபேறில்லாத சமயம். ஆதாரம் - விடுபெறுதற் காதாரம்.

46—48. (பொ.) வெளிப்படை.

(வி.) சங்கரன்-இன்பத்தைச் செய்பவன்; இறை-எங்கும் தங்குபவன். தாணு-நிலேத்தவன்; கம்-தலே-தலேயைக் கையி லுடையவன் கங்கரன். விழிக்கமலம் இடந்து அடியின் சாத்தி என மாறுக. எதுகை நோக்கிச் சார்த்தி சாத்தியாயிற்று. திருமால் சக்கரம் பெற்ற வரலாறு குறிக்கப்பட்டது. தான் ஒருவனே இறைவன்; மால் முதலிய யாவரும் பசுக்களே என்பதற்காக விடைக்கொடி நாட்டினுன் சிவன். அறக்கடவுளும் விடையாக விளங்குவது என் பதை நினைப்பிக்கத் தருமக்கொடி என்றூர். திருமாலும் விடையாகச் சிவனைத் தாங்கியதும் கருதுக. சிவனே சிவஞானி என்பதை இப் பகுதி யுணர்த்தும்.

49. (பொ.) எக்காலத்தும் அடிக்கப்படாது எழுகின்ற சொல்லாகி ஆனந்தமாகி அழியாத நாதமாகிய முரசுடையான்.

ஆணை

சந்தமல ரோன்முதலோர் தங்களாற் ஞேற்றமுதல்
ஐந்தொழிலும் செய்விக்கும் ஆணையான்—முந்து

சிவஞானிகோலம்

தவஞான மில்லாதார் சாற்றினும்வீ டெய்தும்
சிவஞான தேவெனும்பேர்ச் செல்வன்—பவநாசன்

முன்னொருநாட் சாதனத்துண் முந்துதிரு வெண்ணீறு
மன்னு முயிரினுறு மாசொழிக்குந்—துன்னு

கலவையுடன் மாசாய்க் கழியுமெனக் கூறிப்
புலவரினம் போற்றப் புனைந்து—பலவணிகள்

தாங்குமள வன்றித் தரும்பே றிலையென்றுந்
தீங்கி லிதையொருவன் தீண்டுறினும்—ஓங்கும்

உருத்திரனே யாவனென வோருருத்தி ராக்கம்
பொருத்த முறவுறுப்பிற் பூண்டு—வருத்துகழை

(வி.) நாதம் விந்து தத்துவத்துக்கு மேற்பட்ட தத்துவம். அது அடிக்கப்படாமலே இயல்பாகவே மொழி வடிவாகி யெழும் தன்மை யது; ஆனந்தம் தருவது; அழிவில்லாதது. முரசு அடிக்க எழும் ஒலியுடையது; ஆனந்தம் தருவது; எனினும் அழியும் தன்மை யுடையது.

50. (பொ.) பிரமன் முதலிய ஐவரையும் கொண்டு ஐந் தொழிலையும் செய்விக்கும் ஆணையுடையவன். (வி.) கடி–மணம், சந்தம்–அழகு. பிரமன், திருமால், உருத்திரன், மகேசுரன், சதா சிவன் ஆகியவர்மூலம் படைத்தல், காத்தல் அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழிலையும் இறைவன் செய்விப்பன்.

51 (பொ.) பழம்பிறப்பிற் செய்த தவத்தால் வரும் ஞானம் இல்லாதவர் சொன்னலும் வீடடையும் பயன் தரும் சிவஞான தேவன் என்ற பெயருடையவன்; பிறப்பறுப்பவன்.

விற்ருேண் மதவேளே வெல்லுமடை யாளமெனக்
கற்ருேய் துகில்மருங்கிற் காட்சிதரக்—கற்ருேர்

பல்வேறு நிலையுடைய அடியவர்

அறியா வறிவாகும் ஆனைமேல் கொண்டு
மறியா மனத்தை மறிப்பார்—உறியாய

தற்றுநிலம் வீழ்ந்ததுபோல் ஆசையற மெய்ச்சிவத்தின்
உற்றுவச மற்றிருக்கும் உண்மையார்—முற்றும்

அழுக்கா றவாவெகுளி யின்ஞச்சொல் நான்கும்
இழுக்கா அறமுடைய ரென்பார்—வழுக்கா

மனைதுறந்தார் மாயை வலிதுறந்தார் பாவ
வினைதுறந்தார் போகம் விளைசிந்—தனைதுறந்தார்

52–56.(பொ) உலாவந்த முன் ஒருநாள்''சாதனங்களுள் முற்பட்ட திருநீறு உயிரின்கண் நிலைத்த குற்றம் போக்கும்; சந்தனக்கலவை உடல் அழுக்காகிக் கழியும்'' என்று கூறி (சந்தனம் விட்டு திருநீற் றினை மட்டும்) புலவர் கூட்டம் போற்றப் புனைந்துகொண்டு,'பிறவணி கலங்கள் சுமக்குமளவன்றி அவைதரும் பேறு ஒன்றில்லை; எக்காலத் திலேனும் குற்றமற்ற இவ்வக்கமணியை ஒருவன் தொட்டாலும் அவன் உருத்திரனுக ஆவான்' என்று கூறி உருத்திராக்கமணியைப் பொருத்தமாக அங்கங்களிற் பூண்டு, மன்மதனை வெல்லும் அடை யாளம் என்று காவிக்கல் தோய்க்கப்பட்ட ஆடை மருங்கிலே காட்சி தருமாறு.

(வி.) சாதனங்களுள் திருநீறு முற்பட்டதாம். சிவஞானி சந்த னம் பூசுவதில்லை, அது காமத்தை வளர்ப்பது ஆதலின்

57–64. (பொ.) வெளிப்படை. (வி.) கற்ருேரும் அறியாத என உம்மை விகாரத்தால் தொக்கது. அறிவு–சிவஞானம். உறியானது தான் மேல்கூரையில் கட்டுப்பட்ட காலத்துச் சுமை கொண்டும் அற் றுத் தரையில் வீழ்ந்த காலத்துத் தன்வசமன்றி நிலத்தின் வசப்பட்டுச் சுமையின்றியும் இருப்பதுபோல அடியவர் ஆசைத் தொடர்புற்ற காலத்துப் பல துன்பங்களைத் தாங்கியும் தொடர்பற்ற காலத்துச்

வேண்டுதல் வேண்டாமை யில்லாதார் மெய்யன்பு
பூண்டு சிவனடியே பூசிப்பார்—மீண்டுபவம்

வாராவா றோர்வார் மறையும் சிவாகமமும்
ஆராய்வார் ஆரா வநுபூதி—சார்வாவார்

பொன்னும் சிலையும் புகழும் பழியுமே
மன்னும் குடிலுமணி மாளிகையும்—முன்னும்

படிவே றிலாதார் பகைநட் பிலாதார்
முடிவே லரசாய் முயல்வார்--கடிவேதும்

இல்லா திரப்பார் இறையை நினைந்தொன்றும்
சொல்லா திருப்பார் துதிசெய்வார்—வெல்லாத

வைம்புலனும் வென்றுர் அவற்றைத் தடாதுமனம்
செம்பொருளின் வைத்துச் செயல்செய்வார்--நம்பெருமான்

மேனியாம் அஞ்செழுத்தும் வேண்டி யெடுத்துரைப்பார்
மோனிகளாய் வீற்றிருந்து முன்னுவார்—மேனியெலாம்

பூசுவார் வெண்ணீறு புண்டரமே சாத்துவார்
தூசுளார் தூசு துறந்துளார்—ஆசையினுல்

வேணி முடிப்பார் விரிப்பார் உலகியலை
நாணிநடப் பாருலகை நாணுதார்—பேணித்

சிவத்துடன் சேர்ந்து தன்வசமற்று சிவத்தின் வசப்பட்டுத் துன்பம் இன்றியும் இருப்பர். ''முற்றும்......அறம்''. இதில் ''அழுக்காறவா வெகுளியின்னுச் சொல் நான்கும் இழுக்கா இயன்ற தறம்'' என்ற குறளைக் காண்க.

அநுபூதி-ஞான அநுபவம்.

பொன்னும் சிலையும் வேறிலாதார் என்பதை ''ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவர்'' என்ற சேக்கிழார் வாக்குடன் ஒப்பு நோக்குக.

கடிவு-கோபம்.

தனதுபதம் எத்திறத்தும் சாரு மடியார்
இனமருவி யெம்மருங்கு மீண்ட—மனுவுரையாத்

தன்பெயர்கொண் டார்வமொடு சாரும் புலவரிற்கால்
புன்புவியில் வையாப் புலவர்தாம்—வன்பவநோய்

மாற்றுமருந் தென்று வடிவிற் படத்துடையா
தேற்று மகிழவடி யின்றுகள்போய்ப்—போற்றுமிசை

விண்ணிற் புகவணைய மேவுதனை மாசகன்று
மண்ணிற் புகுமா மதியென்று--நண்ணி

65—70. (பொ.) வெளிப்படை.

(வி.) கடிவேதுமில்லாதிரப்பார், "இரப்பான் வெகுளாமை வேண்டும்" என்ற வள்ளுவர் வாக்குக் கிலக்கியமாவார். செம் பொருள்–பரம்பொருள். தடாது–தடுக்காமல். சிவபிரான் பஞ்சாக் கர வடிவினன். "ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே, நாடும் திருவடியி லேநகரம்–கூடும், மகரம் உதரம் வளர்தோள் சிகரம், பகருமுகம் வாமுடியப் பார்" எனவும்,

"சேர்க்கும் துடிசிகரம் சிக்கனவா விசுகரம், ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கிலிறைக் கங்கிநகரம் அடிக்கீழ் முயலகனுர், தங்கு மகரமது தான்" எனவும் உண்மை விளக்கம் கூறுவது காண்க. பூசுதல்–தூளாக அணிதல். புண்டரம்–நீரில் குழைத்து அணிவது. தூசு–ஆடை, வேணி–சடை, உலகியல்–உகத்தார் கூற்று.

71—73. (பொ.) வெளிப்படை.

(வி.) தன்பெயர் மனுவுரையாக்கொண்டு என மாறுக. மனு–மந்திரம். புலவர்கள் சிவஞானியின் அடித்துகளைப் பேறெனக் கொண்டு துடையாததுபோல விண்ணவரும் பவநோய் மருந்து என்று துடையாதவரானுர் என்க. புகவணைய ஒரு சொல், புக என்பது பொருள். தனை என்றது சிவஞானியை. தனைமேவு மாசு அகன்று என மாற்றுக.

பலவியமும் பொங்கிப் பரவையாய் ஆர்ப்ப
மலவலியை மாற்றுவான் வந்தான்—தொலேவின்

முழங்கு மறையின் முடிந்த பொருளே
வழங்கு மருளுடையான் வந்தான்—விழுந்து

பரவு மடியார் பவப் பிணிக்குத் தானே
மருவு மருந்தனையான் வந்தான்—பொருவின்

ற்மணிகண்டன் என்னுமொழி மாற்றியே யக்க
மணிகண்ட னென்னுமவன் வந்தான்—கணிகண்

டெயினர் மணமயர்வுற் றின்ப மருவு
மயிலே மலேயுடையான் வந்தான்—துயர்செய்

பொறிக்குஞ் சரமதனைப் போகாமற் ருளின்
மறிக்குஞ் சிவஞானி வந்தான்—எறிக்குந்

தினகரனுல் ஆரழலால் திங்களால் போகா
மனவிருளே நீக்குவான் வந்தான்—எனமுன்

பரிச்சின்ன ஞானம் பரியநரர் காதிற்
றிருச்சின்ன வாரமுதந் தேக்க—விரித்துக்

74—81. (பொ.) வெளிப்படை.

(வி.) மதியைக் கண்டு கடல் பொங்கியார்க்கும்; அதுபோல் சிவஞானியைக் கண்டு இயங்கள் ஆர்த்தன. மணிகண்டன்-நீலகண்டன். அக்கம் அணிகண்டன் எனப் பிரித்து உருத்திராக்கம் அணிந்த கண்டத்தையுடையவன் என்க. கணி-வேங்கைமரம் வேங்கை மலரும் காலம் பருவ மகளிர்க்குத் திருமணம் புரியும்காலம் என்பது அக்கால மலேவாழ்நர் (எயினர்) கொள்கை. பொறிக்குஞ்சரம்-ஐம்பொறிகளாகிய யானேகள். தினகரன், திங்கள், அழல் ஆகியவை புறவிருளேப் போக்குபவை; சிவஞானி அகவிருளேப் போக்குபவர். பரிச்சின்ன ஞானம்பரிய-அன்பாகிய அடையாளத்தை வெளிப்படுத்தும் ஞானமானது விரைந்து தோன்ற

உபசாரக்கள்

கவிராயர் போற்றக் கவரிபல முத்திப்
புவிராயர் என்றிரட்டிப் போதத்—தவிராமல்
ஞாலவட்டந் தாங்குமொரு நாகத்தின் குட்டியென
வாலவட்டம் பாங்கர் அசைந்துவரச்—சாலவட்ட
மாமதியாய் நன்கு வளர்ந்து துறந்தபிறை
காமருதன் வாழிடத்தைக் காண்பதற்குச்-சேர்முறைபோல்
வெள்ளை மணிக்கவிகை மேனிழற்ற வான்மழைபோற்
கொள்ளைமல ரன்பர் குழாம்பொழியக்—கிள்ளை

வந்தியர் துதி

மொழியார் மயறுரந்து முத்திபதத் தென்று
மழியாத வின்ப மருள்வாய்—பழியா
நடையா யுலகிறந்த ஞானே தயாவெம்
முடையாய் புலன்கொ ளுணர்வாம்—படையா
யணியே யமுதமே யாவியே சிந்தா
மணியே கருணை மலையே—பணியேறு
கோலங் கரந்துவந்த கோதிலாத் தேறலே
ஞாலம் புகுஞான ஞாயிறே—சீலங்கொள்
காவேயென் செல்வமே கண்ணே சிவஞானத்
தேவே யெனவந் தியர்துதிப்பப்—பூவேறு

(பொ.) வெளிப்படை.

82—85. (வி.) முத்திப்புவிராயர் – முத்தியுலகுக்கரசர், சிவ ஞானி. ஞாலவட்டம்-பூமி. சந்திரன் ஒருகலை வடிவினனாக இறைவன் முடியில் இருந்தவன்; இறைவனருளால் கலை வளர்ந்து மீண்டும் வானிடைச் சென்றவன். தான் முன் இருந்த இடத்தைக் காண்பதற்கு வந்து தங்கிய தன்மைபோல் குடை விளங்க என்க. சிவன் சிவஞானியானமையில் கண்டு செல்லச் சந்திரன் வந்தனன் என்க.

86—91. (பொ.) வெளிப்படை.

கோனும் புரந்தரனும் கொண்ட ணிறத்தானும்
வானும் புகழ்பவனி வந்தருள—ஞானம்

பருவ வகையாற் பலபேதப் பட்டார்
தெருவின் மனமகிழ்ந்து சென்றார்—உருவின்

ஒருதான் அணிய வுரியனவா மென்னும்
பெரிதா மழுவும் பிறவும்--தெரியாமல்

நீத்துப் பொதுவாகும் நீறுதிரு மேனிகொடு
சாத்திப் பெருமைபெறும் சங்கரனை—மூத்துத்

திருந்து நதிமுழுதும் சென்றாடி னாலும்
அருந்து முணவுசரு காக்கி—வருந்துறினும்

நீங்காத மும்மலமும் நீக்கவருண் மேனிகொடு
நாங்காண வந்தருளு நாயகனை--யோங்கார

நாத முறுபொருளாய் நாதாந்த நாடகனாய்
வேத முடிமணியாம் வித்தகனைச்—சாத

மருணா சகனை மயிலையாலைத் தேனைக்
கருணா லயனையெதிர் கண்டார்—சரணார

விந்தந் தொழுவார் விழுவா ரிதுநமக்கு
முந்து தவத்தின் முதிர்வென்பார்—உந்தன்பின்

ஊள்ளந்தா ணின்றுச்சி காறுமுள மாயுருகி
வெள்ளம்பாய் கண்ணராய் மெய்விதிர்ப்பார்—கொள்ளும்

(வி.) வந்தியர்–உலாவருங்கால் உடன் புகழ்த்துதிகள் பாடிச் செல்பவர். கிள்ளை–கிளி. பழியாநடை–உலகினரால் பழிக்கப் படாத ஒழுக்கம். உலகிறந்த ஞானம்–மாயா உலகியலுக்கு அப் பாற்பட்ட ஞானம். புலங்கொள் உணர்வாம் படையாய்–புலன் களைத் தன்வயமாகக் கொள்ளும் உணர்வாகிய படையுடையவனே. பணி–பாம்பு. பணியேறுகோலம்–சிவக்கோலம்.

91—100. (பொ.) வெளிப்படை.

கலமென் றுகிலுதவிக் காவென்பா ரேனைப்
பலவும் பெறுமோர் பரிவிங்—கிலமடியேம்

எம்மை எமக்கருளா யென்பார் இறையவனே
யிம்மை நினையணையோம் என்ருலும்—அம்மையினில்

யானென்று நீயென் றிரண்டில்லை யென்னுமுறை
தானின் றனையணைவோம் சார்ந்தென்பார்—ஊனின்று

வாழ்ந்த தமையுமினி மாய்ந்தாலு நன்றென்பார்
வீழ்ந்து மொழியொன்றுபெற வேண்டுவார்—சூழ்ந்த

திசையெலாம் நின்மெய்த் திகழ்வென்பார் என்சொற் 105
இசையலா மோவரசே யென்பார்—நசையினல்

யாம்புணர்ந் தின்ப மிவராற் பெறுவதலால்
தாம்புணர்ந் தின்புருர் தாமென்பார்—நாம்புணர்ந்தால்

(வி.) பூவேறுகோன்–பிரமன். புரந்தரன்–இந்திரன். கொண்டல்–மேகம், கொண்டல்நிறத்தான்–திருமால். ஞானம் பருவ வகையில் பல பேதம் உண்டு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. அவற்றை அரும்பு, மலர், காய், கனி என ஒப்பிடுவர். தான் என்றது சிவநிலையைக் குறித்தது. நீற்றுக்குப் பொதுத் தன்மை யாவரும் அணிதல். மும்மலம் சிற்சத்தியால் நீங்குவது; ஈண்டு சிவஞானியருளே சிற்சத்தியாம். "கங்கை யாடிலென், காவிரியாடிலென்,......எங்குமீசன் எனுதவர்க்கில்லையே" என்ற அப்பர் வாக்கினை "மூத்து......மும்மலம்" என்றதிற் காண்க. சாதம்–பிறப்பு. மருள்–மயக்கம்; அஞ்ஞானம். சரணரவிந்தம்–திருவடித் தாமரை. 99–முதல் உலாக்காண்பவர் கூற்ருக வருவனவற்றை நாயக நாயகி முறையில் அடியவர் கூறியனவாகக் கொள்க.

உந்து அன்பு–மேலும் ஊக்கும் அன்பு.

100. உள்ளந்தாள்......விதிர்ப்பர்–" உள்ளந்தாள் நின்றுச்சியளவும் நெஞ்சாய், உருகாதால் உடம்பெல்லாம் கண்ணுய் அண்ணு, வெள்ளந்தான் பாயாதால்" என மணிவாசகர் கூறியதைக் காண்க.

நீங்குவது முண்டாம் நினையா திருந்தபடி
யாங்குறுவ தேநல் லறிவென்பார்—நாங்கள்

கரவி லிவர்வடிவங் கண்டநாட் டொட்டிங்
கிரவு பகலில்லை யென்பார்— அரிதிற்

101—107. (பொ.) வெளிப்படை.

(வி.) 'கொள்ளும் கலமென் துகிலுதவிக்கா' என்பது உலாக் கண்டு காமுற்றுக் கலமும் துகிலும் இழந்தார் கூற்று. பரிவு–ஆசை. எம்மை எமக்கருளாய் என்றது தம் வயமிழந்தார் கூற்று. யானென்று நீயென்றிரண்டில்லை என்பது சிவாத்துவைதக்கொள்கை. ஊன்–உடம்பு. மெய்த்திகழ்வு–உருவத்தோற்றம். 'என்சொற்கு இசைய லாமோ அரசே என்பார்' என்றது பிறசமயத்தடியவர் கூற்றுகவும் கொள்ளலாம். 'கழுவேறிகளும் தாழ்காலான்' (13) என்ருர் முன் னரும். 'நகையினுல்......தாமென்பார்' இதன் கருத்தை "தந்த துன் தன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா ஆர்கொலோ சதுரர், அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன் யாதுநீ பெற்ற தொன் றென்பால்" என்ற மணிவாசகர் பாடலுடன் காண்க. "பொன்னுற் பிரயோசனம் பொன் படைத்தார்க்குண்டு பொன் படைத்தார், தன்னுற் பிரயோசனம் பொன்னுக்கங் கேதுண்டத் தன்மைபோல, உன்னுற் பிரயோசனம் வேணதெல்லா முண்டு உன்றனக்கிங், கென்னுற் பிரயோசனம் ஏதுண்டு காண் கச்சியே கம்பனே" என்ற பட்டினத்தார் வாக்கும் காண்க. 'நாம்புணர்...... உண்டாம்'—அவனருளின்றி நாம் சென்ருல் அவன் நம்மை நீங்கும். 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்ருர் மணிவாசகர். 'நினையா......அறிவென்பார்' இத்தொடர்க்கு, அவனை நினையாமலே இப்போதிருந்தபடியே இருப்பது (காட்சி நீட்டிக்குமாதலின்) நல்லறி வாம் என மகளிர்க்கும், வீடும் வேண்டுமென நினையாது பற்றற் றிருந்தபடி இருப்பதுவே நல்லறிவாம் என அடியவர்க்கும் பொருள் கொள்க.

108—114. (பொ.) வெளிப்படை.

(வி.) கரவில் – களவுப்புணர்ச்சியில், ஒளித்தல் இல்லாத. சிலை–கல். மலையோடு மற்பொருதல்போல வலிந்து வருக என்

பிறந்தபயன் மன்மதனாற் பேதுற்று வாளா
விறந்து படுவதோ வென்பார்—சிறந்த
சிலையோநின் னுள்ளம் சிவஞான தேவே
யிலையோ கருணைதா னென்பார்—மலையோடு
மற்பொருதல் போல வலிந்துவரு கென்பார்நீ
யெற்புணர்வ தென்னென் றிரங்குவார்—பொற்ப
வறவனே நின்னை யலதெண்ணேம் வானத்
திறைவனே வந்தாலு மென்பார்—துறவனே
மேவிலெமை நின்னை விகாரி யெனவுரைப்பார்
யாவருல கெங்குமிலை யென்பார்—பூவில்
இவரெலும்புந் தோலுமாய் எய்தினா ராயின்
எவர்விரும்பி வேண்டுவா ரென்பார்—அவர்நெருங்கி

தலைவி தன் நிலை கூறுதல்

யெய்த வுடன்வணங்கி யிவ்வா றடியேனும்
செய்த தவங்கள் செலுத்தப்போய்—ஐயன்

பார்–மற்போர் புரிவான் தானே மலையிடம் சென்று பொருதல் போல அடியவர் அவன் அசையாதிருக்கவும் வலிந்து எம்மிடை வருக என அழைப்பர்.

விகாரி–இயல்பில் மாறுபட்டவன்.

'மேவில் எமை......இலையென்பார்'–எம்மை யுடலிலும் உயிரிலும் கலந்து மேவினால் யாம் அடையும் இன்ப-துன்பங்களை நீ யடையாததால் நின்னை விகாரி என்பவர் யாவர்? ஒருவரும் உலகில் இலர். உயிராயும் உயிர்க்குடலாயும் இறைவனிருப்பினும் இறைவனுக்குப் பற்றில்லை என்பதாம்.

115—116. (பொ.) அடியேனும் முற்பிறவியிற் செய்த தவங்கள் என்னைச் செலுத்தச்சென்று சிவபிரானுக்குத் தொண்டு செய்தலை மறவாத பழைய அருச்சுனன் வில்லால் அடியுண்ட தழும்பு மறைந்துள்ளதலையும்

தொழும்பு மறந்தொழியாத் தொல்விசயன் வில்லின்
தழும்பு மறைந்த **தலையும்**—எழுந்துமதன்

வின்னியா சஞ்செயுமுன் வென்றுபகை யின்மையால்
சன்னியாசஞ் செய்படைத் **தண்ணுதலும்**—மன்னிவாழ்

கேவலமென் கங்குல் கெடுக்கும் தொழிலொன்றின்
மேவலுற வொத்த **விழியிரண்டும்**—ஆவலொடு

நல்லவியல் கேளா நணுகுமிசை பாடுநரைச்
செல்ல விடுத்த **திருச்செவியும்**—வல்ல

வியற்பகையை முன்னம் இரந்த மொழியை 120
யயர்த்த மலர்**வாய்** அழகும்—வியப்புறவவ்

வாலமுண்ட தென்ப தறையாம லிவ்வுலகம்
பாலருந்து மென்னப் படு**மிடறும்**—மேலுவந்து

---

117. (பொ.) மன்மதன் விழுந்து வில்லைத் தொடுமுன் புலன்களை வென்றதால் பகையில்லையாதலின் துறத்தலைச் செய்த படையாகிய தண்ணிய நுதலையும். (வி.) காமனை எரிப்பதில்லை யாதலின் நுதல் தண்ணியது.

118. (பொ.) கேவலமென்ற இருட்டைக்கெடுக்கும் தொழில் ஒன்றிலேயே பொருந்தி ஒத்துள்ள இரண்டு விழிகளையும்.

(வி.) கேவலநிலை-உயிர்கள் பிரகிருதியில் கருவிகரணங்கள் அற்று ஒடுங்கிக் கிடக்கும் நிலை.

119. (பொ.) ஆவலொடு தன் நல்ல இயல் கேட்டு வந்த அசுவதரர், கம்பளதரர் என்ற இரண்டு இசைபாடுநரைப் போக விட்ட திருச்செவியினையும். (வி.) அவ்விருவரையும் இசை கேட்டுக்கொண்டிருப்பதற்காகத் தன் காதுகளில் வைத்துக்கொண்டார் சிவன் என்பது கதை.

120. (வி.) மனைவியை யிரத்தல் நன்றன்று ஆதலின் அதனை மறந்தவாய் என்றும் அழகிய வாய் என்றும் கூறினர்.

121. (வி.) சிவன் கழுத்து ஆலமுண்டது. சிவஞானி கழுத்து பாலுண்பது.

நாமங்கை போற்றவுள நாணும் தலைமாலை
போமங் கலமாம் **புயமலையும்**—சேமங்கொள்

ஏனமருப் பில்லா திருப்பதுவு மோரழகென்
றூன மறத்திகழு மொண்**மார்பும்**—வானம்

வழுத்தம் புயமா மனையான் தலைக்குக்
கழுத்தென்ப தில்லாக் **கரமும்**—எழுத்தென்று

கொள்ளுங் கொடுவரித்தோல் கொள்ளாது நூல்வலியைக் 125
கொள்ளுந் துகிலுடுத்துக் கொள்**மருங்கும்**–உள்ளுமும்பர்

மன்னு முடிவெருவி வந்துழியிம் மன்பதைதஞ்
சென்னி படச்சிவக்குஞ் **சித்தடியும்**—என்னுடைய

கண்களிப்பக் கண்டுமிகக் காதலா னேனிந்த
மண்களிக்க வந்தசுவை வானமுதம்—பெண்களுக்கு

---

122. (வி.) சிவபிரான் மாலையில் பிரமன் தலையும் உண்டு. அத்தலை, தன் மனைவியாகிய நாமகள் தன் பகைவணங்கிய சிவபிரானைப் போற்றவே நாணுகின்றது. அத்தகைய தலை மாலை நீங்கி மங்கல மாக அமைந்த புயம் என்க.

123. (வி.) ஏனம்–திருமாலாகிய பன்றி. பன்றி மருப்பணிந் திருந்தது ஊனம் என எண்ணி அதை நீக்கித்திகழும் மார்பு என்க.

124. (வி.) அம்புயமா மனையான்–தாமரை வீட்டான், பிரமன். சிவபிரான்கரம் பிரமன் தலையைத் தாங்கியமையின் தலைக்குக் கழுத் தாயிற்று. அதைத் தாங்காத கரம் சிவஞானியது ஆதலின், 'தலைக்குக் கழுத்தென்பதில்லாக் கரம்' என்றார்.

125. (வி.) கொடுவரி – புலி. எழுத்தாகக்கொள்ளுமாறு அமைந்த வரி.

126. (பொ.) நினைக்கும் தேவர் வீழ்ந்து வணங்கும்போது அவர் முடி தன் திருவடியிற்படிதலை வெருவி இங்குவந்தும அன்பர் கள் வீழ்ந்து வணங்குகையால் அவர் தலைகள்பட்டுச் சிவக்கும் ஞானமயமான திருவடியும். சித்–ஞானம்.

மாலா ரணனமரர் மாதவரிம் மானுடர்போற்
ருேலாத வீரமுடைத் தோற்றத்தான்—மேலாய

செங்கை யமுதன்னுன் சிவஞான தேசிகனெம்
பங்கமல மாயைப் பகையாளுன்—தங்கணல

ஆண்டுறந்து சீர்சா லுடைதுறந்து செம்மணிப்பொற்
பூண்டுறந்து கண்கள் புனல்சொரிய—வாண்டடைந்து

நையு மவர்நிற்க நாயேன்பாற் பொங்குமருள்
செய்து திருக்கடைக்கண் சேர்த்திஞன்—ஐயனேநான்

அன்று தொடங்கி யணேவான் விருப்புற்றேன்
என்றுணே நீயன்றி யிலெநெஞ்சே—நன்றிபுரி

நெஞ்சின் பெருமை

வேதா கமங்கள் விதிக்கும் விதியனைத்தும்
நீதான் புனிதமுற நேர்ந்தன்ருே—வாதார

யோக மிருநான்கும் உன்னேவய மாக்குவதற்
காக முயலுவன வல்லவோ—போகமுறு

தன்மைக்கும் செய்யும் தவத்திற்குங் கற்றறியு
நன்மைக்குங் கொள்ளுமொரு நட்பிற்கும்—வன்மைக்கும்

127—132. (பொ.) வெளிப்படை.

(வி.) ஆரணன்-பிரமன். (ஆரணம்-வேதம்) பெண்களுக்குத் தோலாத என்க. செங்கையமுது - செங்கையிடத்துள்ள அமுது. நுகர்தற்கு எளிது என்றபடி. பங்கம்-சேறு. மலம் மாயை கூறியிருப்பினும் கன்மமும் கொள்க. நலவூண்-நல்ல உணவு.

133—142. (பொ.) வெளிப்படை.

133. (வி.) ஆதார யோகம்-ஞானம் பெறுதற்கடிப்படையான யோகம். அவையெட்டு: இயமம், நியமம், ஆதனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணே, தியானம், சமாதி.

ஈகைக்குந் தன்னை யிருந்தாங் குணர்ந்தடையும்
ஓகைக்கும் நீயே யுறுதுணைகாண்—போகத்தின்

நின்றாரை மெய்த்துறவி னிற்பிப்பாய் அத்துறவிற்
சென்றாரை யில்லிற் செறிப்பிப்பாய்—குன்றா

வறத்தை மறமாக்க வம்புவியின் மிக்க
மறத்தை யறமாக்க வல்லாய்—நிறுத்தி

யொடுக்குதலே முத்தி யுனைவிடயத் தோட
விடுக்குதலே பந்தமென மிக்காய்—அடைக்குதலால்

நின்றாயே யாகிலொரு நீதான் புலன்பரந்து
சென்றாலும் எய்துவதோர் தீதுண்டோ—பொன்றாத

முத்தி யொருகணத்தின் முன்வருநீ வேண்டுவையேல்
இத்தனையும் நின்னால் இசைந்தனகாண்—சத்தியமாய்

ஏதேனும் மேனி யெனக்கொண்டு வந்தருள
மாதே வனைநீ வருவிப்பாய்—தூதேவு

நம்பிகர வுண்டவொரு நற்பனவப் பிள்ளைதனை
யம்புவியின் மீள வழைத்ததூஉம்—எம்பெரிய

நாவிற் கரசு நடுக்கடலுட் கற்பெருந்தூண்
மேவிப் புணையா மிதந்ததூஉம்—பாவிற்கு

---

136. (வி.) ஓகை–மகிழ்ச்சி, பேரின்பம். 140 எய்துவதோர் தீது–மனம் அடைவதொரு திங்கு. பொன்றாத–அழியாத.

144. ஏதேனும்.........வருவிப்பாய் என்பது "யாதொரு தெய்வம் கொண்டீர் அத்தெய்வ மாகி யாங்கே, மாதொரு பாக னார்தாம் வருகுவர்" என்ற சிவஞானசித்தியார் பாடற்கருத்துடையது.

143—153. (பொ.) வெளிப்படை. 143 தூதேவுநம்பி–சுந்தரர். கர–முதலை. பனவப்பிள்ளை–பார்ப்பனப்பிள்ளை. 144 புணை–தெப்பம். 145 புலவர்–திருஞானசம்பந்தர். மயிலை–மயிலாப்பூர். தில்லை–சிதம்பரம். 146 வாளாம்கண் என்றது காமக்குறிப்

வல்ல வொருபுலவர் வல்லென்பு பெண்ணுகச்
செல்ல மயிலேயிடைச் செய்ததூஉம்—தில்லேயினில்

வாளா நெடுங்கண் மடவரலே நீலகண்டர்
சூளால் மனேயுட் டுறந்ததூஉம்--தோளாத

முத்தனேய நன்மாதை முன்னம் **இயற்பகையார்**
வித்தகனே நல்கி விடுத்ததூஉம்--புத்திரனேத்

தொண்டர் அறுத்தமலன் தொண்டர்போல் வந்திரப்பப்
பண்டு சமைத்துப் படைத்ததூஉம்--மண்டிருளின்

முக்கணனுர் செல்ல முளேவார **மாறனுர்**
அக்கணமே செய்க்க ணடைந்ததூஉம்—புக்கரனுர்

வேண்ட வரிந்துமகள் மென்கூந்தல் **கஞ்சாறர்**
ஆண்டு வணங்கி யளித்ததூஉம்—மூண்டமரின்

ஏற்ருனே யீசரென **வேனுதி நாதனுர்**
நீற்ருல் நினேந்துருகி நின்றதூஉம்—மாற்ருனேக்

குத்தினுன் என்று குறியாமல் **மெய்ப்பொருளார்**
தத்தனே காக்கவெனச் சாற்றியதூஉம்—மத்தவிபம்

சிந்த மலரைச் **சிவகாமி யாண்டார்க்**காய்
முந்தியெறி பத்தர் முனிந்ததூஉம்—சுந்தரரைத்

பில்லாமையால். மனேயுள் துறத்தலாவது மனேயில் இருந்து இல்லறம் நிகழ்த்தியே மனத்தாலும் தொடாமல் இருந்தது. "அற்புறு புணர்ச்சியின்மை யயலறியாமை வாழ்ந்தார்" என்ருர் சேக்கிழார். 147 வித்தகனே–வித்தகனுக்கு. 148 தொண்டர்–சிறுத்தொண்டர். 149 மாறனுர்–இளேயான்குடிமாறநாயனுர். 150 கஞ்சாறர்–மானக் கஞ்சாற நாயனுர். ஆண்டு–திருமணப்பந்தலில். 151 நீற்ருல்–நீறணிந்திருத்தலால். நினேந்து– இறைவனடியார் என நினேந்து. உருகி–கொல்லத்துணிந்தமைக்கு வருந்தி 152 மாற்ருன்–முத்த நாதன் என்ற பகைவன்.

153 மத்த இபம்–மத்தகத்தையுடைய யானே.

தொண்டத் தொகைபெறூஉத் தொல்லுலக முய்யவிறன்
மிண்டத் தொழும்பர் வெகுண்டதூஉம்—மண்டபத்து

நீலநக்கர் பாணருக்கு நேசித்து நல்யாக
சாலை யிடத்தைமுனந் தந்ததூஉம்—மாலயற்கும்

எட்டாற்கு வேண்டி யிருங்**கலயர்** குங்கிலியம்
முட்டாமற் கொள்ள முயன்றதூஉம்—வட்டாடி

யாக்கு பொருளை யரனடியார்க் கன்பினால்
மூர்க்கர் உதவி முடித்ததூஉம்—தூக்குதுலை

மீது பரனொளித்த வெண்கோ வணத்திற்காப்
போத **வமர்நீதியார்** புக்கதூஉம்—ஆதியுமை

பாக னடியவரைப் பண்டைநிலை யுன்னியதந்
தோகைகரங் **கம்பர்** துணித்ததூஉம்—சோகமறக்

கண்ணப்பர் மென்றசையைக் காளத்தி யார்தம்மை
யுண்ணப்ப வென்றுமுன மூட்டியதூஉம்—வண்ணப்பொன்

மீனை யளக்கரிடை மிக்க **வதிபத்தர்**
மேனைமரு கற்கென்று விட்டதூஉம்—யானைமிசை

வந்த**மலை நாட்டரசர்** வண்ணனைத் தொண்டரெனப்
பந்தமறு மன்பாற் பணிந்ததூஉம்—கந்தைபரற்

154—165. (பொ.) வெளிப்படை.

154. தொழும்பர்-அடியார். மண்டபம்-தேவாசிரியன் மண்டபம். மண்டபத்து வெகுண்டது என மாறுக. 155. பாணர்-நீலகண்ட யாழ்ப்பாணர். 156. மாலயற்கு எட்டான்-சிவபிரான். கலயர்-கலய நாயனார். இரும்-பெருமை. 156. வட்டு-சூதாட்டம். 159. தோகை-மனைவியார். கம்பர்-கலிக்கம்ப நாயனார். 161. அளக்கார்-சேறு. மோனை-உமையம்மையின் தாயார். மோனைமருகன்-சிவபிரான். 162. மலைநாட்டரசன்-சேரமான் பெருமாள் நாயனார். 163. சிலை-கல். 164. தாட்புலியார்-புலித்தாளார்-வியாக்கிரபாதர்.

கன்பின் உதவிலனென் றக்குறிப்புத் தொண்டர்தாம்
முன்புசிலை யோடுதலை மோதியதும்—அன்புறுமோர்

தாட்புலியார் போற்றுதிருத் தாண்டவனெற் கொள்கிளையைக்
கோட்புலியார் நேசமறக் கொன்றதூஉம்—கேட்பிலிவை

யெல்லாமும் நின்றன் இசைவாற் புரிந்தனநீ
யல்லா தியற்றலற மன்றுகாண்—சொல்லாட

நின்பெருமை யாரறிவார் நீயென் னொடுகூடில்
என்பெருமை சொல்வாரும் இல்லைகாண்—வன்புவியின்

நின்னைத் துணையல்லை நீயென்று நீங்கினுல்
பின்னைத் துணையாகும் பேரில்லை—யுன்னைத்

துணையாக் கொளற்குத் துணைநீ நினக்கிங்
கிணையாய்ப் பிறிதொன் றிலைகாண்—புணையாய்ப்

பிறப்புக் கடற்குப் பிடிக்கப் படுவாய்
மறப்புற் றதினழுத்த வல்லாய்--சிறப்பு

விலங்கின் நரர்தமக்கு மேவியது நின்னுல்
இலங்கு முனிவரர்கட் கெல்லாம்--நலங்கொள்

பெருமை நினைத்துணைக்கொள் பெற்றியா லன்றோ
வுரிமைநீ யன்றிவே றுண்டோ--வருமையென்ப

தாண்டவன்–சிவபிரான். கிளை–சுற்றத்தார். 165. புரிந்தன–விருப்பத்தோடு செய்யப்பட்டன.

166—175. (பொ.) வெளிப்படை.

166. (வி.) நின்பெருமை சொல்லாட என மாறுக. நீ யாராலும் சொல்லுதற்கரிய பெருமையுடையாய் ஆதலினுல் நீ என்னொடு கூடுவாயானுல் என் பெருமையும் யாராலும் சொல்ல முடியாது என்பதாம்.

167. நீ துணையில்லை என்று நின்னை நீங்கினுல் எனக் கூட்டுக.

தில்லையுனக் கெவ்விடத்தும் என்மனமே யாதலினால்
நல்ல பெரியசிவ ஞானிபால்--செல்லவுனை

வேண்டுறுவேன் தூதாக வேதக் கிளியைவிடின்
காண்ட லரிததனாற் கண்டாலும்--ஆண்டதுதான்

ஒன்றாக ஓதா துரைக்கும் பலமயங்கச்
சென்றாலும் நீயேதான் செல்லாமல்--நின்றாலும்

நீயே பிறிதில்லை நெஞ்சமே யெற்பயந்த
தாயே யவனிடங்கள் சாற்றக்கேள்--பேயேன்

சிவஞானியிடங்கள்

காஞ்சி

எழுநகரி னுட்சிறந்த தென்பதலாற் சீர்மை
முழுது மியம்ப முடியா—தழகுறுவேற்

கந்தனுயர் கச்சிவளம் காற்கூ றளவுரைப்பான்
ஐந்துகரன் சொல்வன் அரைக்கூறு—நந்தமரன்

---

169. மறப்புற்று-மறப்புற.

173. வேதமாகிய கிளி. வேதம் இறைவனைக் காணாதது; இறைவன் இயல்பைப் பலபடக் கூறுவது ஆதலினால் காண்டலரிது; கண்டாலும் பல மயங்க உரைக்கும் என்றார்.

176. (பொ.) வெளிப்படை

177—181. (பொ.) காஞ்சியின் வளம்பற்றிக் கந்தன் காற்கூறு சொல்வன்; ஐந்துகரன் அரைக்கூறு சொல்வன்; உமையம்மை முக்காற்கூறு சொல்வள்; சிவபிரானே முழுதும் சொல்வன் என்று ஆதிசேடன் நினைந்து, விளக்கமுள்ள ஆயிரம் நாவினைக்கொண்டு நான் அக்காஞ்சியின் பெருமையைச் சொல்வது கால் அளவுக்கும் கீழ்ப்படுமேயன்றி மிகாது என நினைந்து நாணாகிக் கடலிடை வீழ்ந்தான். திருமாலோ தானும் காஞ்சியின் பெருமைசொல்ல முடியாதவனாய் அந்த ஆதிசேடன்மீதே போய்த் தூங்குபவன்போல் கிடக்கும்

கூறுடையாள் ஓர்முக்காற் கூறுரைப்பள் முற்றுமிள
வேறுடையான் சொல்வன் எனவனந்தன்—வீறுடைய

நாவா யிரங்கொண்டு நானுரைத்தல் காற்கீழென்
ருேவாத நாணுகி யோடியே—தாவாத

வேலையிடை வீழவவன் மேல்வீழ்ந்து துஞ்சினுன் 180
போல வரிகிடப்பப் பொங்குபுகழ்—ஞாலமெலாம்

நண்ணவொரு **காசி நடுமெய்ஞ் ஞகரமுறும்**
எண்ண வரிய வெழில்நகரும்—மண்ணுலகின்

விருத்தாசலம்

முன்னேர் தொடைப்பொருளை முற்றுங் கரந்துரைத்துப்
பின்னே ரெமதென்னும் பெற்றிபோல்—அன்னேபின்

வந்திளைய காசி மரிப்பார்க்கு முத்திபதந்
தந்தடுவ னென்றுமிகு தன்செயலை—முந்துகொடு

சென்று பரதேயத்திற் சேர்ந்திருப்பச் சீர்மலிந்து
மன்றல் மலரு மணியணியுந்—துன்றுநறுங்

படியாகவும் மிக்க புகழானது உலகெங்கும் பரவவும் காசி என்ற பெயரின் நடுவில் ஒரு ஞகர எழுத்து பொருந்தி அளவிட அரிய அழகுடையதாய் இருக்கும் காஞ்சி நகரும்.

(வி.) 178. அரன்கூறுடையாள் – இறைவன் இடப்பாகம் உடையாள்; உமையம்மை. இளவேறுடையான் – சிவபிரான், அனந்தன்–ஆதிசேடன்.

179. நாணுகி–நாணம் கொண்டவனுகி, கயிருகி. கடல் கடந்த போது மந்தர மலையாகிய மத்துக்கு ஆதிசேடன் கயிருக இருந்தான் என்பது புராணம்.

180. காஞ்சியில் திருமால் கிடந்த திருக்கோலத்துடன் இருப்பதை மனதில் வைத்து இவ்வாறு கூறப்பட்டது.

181. காசி–இடையில் 'ஞ்' சேர்க்கக் 'காஞ்சி' என்ருகும்.

குங்குமமும் சந்தனமுங் கோலம் பெறப்புனையா 185
வங்குருகு மேகலையு மாங்கொலிப்பத்—துங்கமுறு
நன்பதியைச் சேரவரு நங்கைபோற் சென்றுமலி
தன்பதியைச் சார்ந்தணைந்த தண்கங்கை—யென்பதுதான்
புத்தா றெனத்தான் புராதனவா றென்றுமணி
முத்தா றுடுத்த **முதுகிரியும்**—செய்த்தாமம்

சேயூர்

அன்னமாய் முற்றும் விளைய வளங்களெலாம்
துன்னுநாட் டிற்குச் சுவைவிளைய—மன்னுவேள்

182—84. (பொ.) முன்னோர் தொடுத்த செய்யுளின் பொருளை முழுதும் பிறர் அறியாமல் மறைத்துப் பின்னோர் அதனையே தாம் உரைத்து இது எமது என்னும் தன்மைபோல, விருத்தாசலம் தோன்றியபின் தோன்றியதான இளைய காசியானது தன்னிடம் வந்து இறப்பார்க்கு முத்தியாகிய பதத்தைத் தந்திடுவேன் என்று விருத்தகிரியாகிய தன் செயலை (தன்னிடம்வந்து இறப்பார்க்கு முத்தி கொடுத்தலை) முற்பட்டு எடுத்துக்கொண்டு பரதேசம் (வடக்கே) சென்று சேர்ந்திருக்குமாறு ஆறுடுத்த முதுகிரி என்க.

(வி.) அன்னோ-ஐயோ! இரக்கச்சொல். இளைய காசி–காசி நகரம். விருத்தாசலம் முதுகாசி எனப்படும.

184—86. (பொ.) சீர்மலிந்து......கங்கை வரை கங்கையைப் பெண்ணாக உருவகித்தது.

மணமுள்ள மலரும் மணிகளாகிய அணிகளும் குங்கும மரமும் சந்தன மரமும் ஆகியவற்றை அழகாக மேற்கொண்டு அழகிய பறவைகளும் தன்பால் மேவிய மான்களும் ஆர்ப்பரிப்பத் தன் பதியைச் சாரவரும் கங்கை, மலரும் மணியணியும் குங்குமமும் சந்தனமும் அழகுறப் புனைந்து அழகிய வளையலும் மேகலையும் ஆர்க்க நன்பதியைச் சாரவரும் நங்கை, போன்றது. என்க.

187. (பொ.) அக்கங்கையானது, காசி இளையதாதலின் அதைச் சார்ந்த அது புத்தாறுகும். விருத்தாசலம் பழையதாதலின் அதைச்சார்ந்த நான் பழைய ஆறு என்று பெருமைப்படும் மணிமுத்தாறு சூழ்ந்த விருத்தாசலம்.

மீதண்ட ரோடமர்ப்ப வெங்கணையும் வின்னாணும்
கோதண்ட மும்பொருந்திக் கொண்டேக—வேதண்டம்

ஒப்ப வுயர்த்தவுயர் உப்புக் குவான்மீது
வெப்ப மறுமதிய மெய்யுரிஞ்சத்—துப்புறுபுள்

உண்ணிலா வுண்ணு தொழிந்துமட வார்முறுவல்
வெண்ணிலா வுண்டு மிகவளரக்—கண்ணெலாம்

பூப்பட் டிருந்தாலும் பூம்பொய்கை நன்காழ்ந்து
பாப்பட்ட சேடன் பணங்காட்ட—வாய்ப்புற்ற

188—200. சேயூர்பற்றிய சிறப்பு.

188. (பொ.) வயல்கள் சோருகவே விளைய, எல்லா வளங்களும் பொருந்தும் நாடுகளுக்குத் தரவேண்டி உப்பு விளைய. சுவை-உப்பு. உணவுப் பொருள்களைச் சுவைப்படுத்தலின் உப்பு சுவை எனப்பட்டது.

189. (பொ.) மன்மதன், மேலேயுள்ள தேவரோடு போர் புரியவேண்டிக் கொடிய கணைகளையும் வில் நாணினையும் வில்லையும் கொண்டு ஏகும்படியாகத் தாமரை மலர்களையும் வண்டுகளையும் கரும்பையும் விளைவித்து

190. (பொ.) மலைபோல உயர்த்திக் குவிக்கப்பட்ட உப்புக் குவியலின் மேலே வெப்பம் அற்ற மதியம் தன் உடம்பைத் தினவு போக உரிஞ்சிப்போக. வேதண்டம்-மலை. உப்பு மிகுதிகூறியது.

191. (பொ.) அறிவுள்ள சகோரப் புள்ளானது ஊர்க்குள் தோன்றும் நில ஒளியை உண்ணுமல் மகளிர் முறுவலாகிய வெண்ணிலாவுண்டு மிகவும் வளர. இதனுல் நிலவொளியில் மகளிர் முறுவலித்து மகிழ்வது கூறப்பட்டது.

192. (பொ.) பூம்பொய்கையானது தன் இடம் எங்கும் பூவால் நிறைந்திருந்தாலும் தான் ஆழமுற்றிருந்து, ஆதிசேடன் படத்தைக்காட்ட.

(வி.) கண் – இடம். கண்ணெல்லாம் பூவிழுந்திருந்தாலும் பொய்கையானது ஆதிசேடன் படம் காட்டிற்று என்பது ஓர் நயம். பாப்பட்ட-பாக்களால் புகழப்பட்ட, திருமாலுக்குப் பாயாகப்பட்ட.

கங்கையுடன் வந்தாரூர் கண்டுவரு வீரென்று
தங்குறுதன் மக்க டமைவிடுப்பத்—துங்கமுறு

முத்தீ வளர்ப்பமறை முன்னோர் விருந்தினுத
ரத்தீ யவிப்ப வவர்மாதர்—கொத்தின்

கொடியனையார் கொம்மைமுலைக் குன்றே வருத்தத்
துடியிடையே நின்று துவள—நெடிய

கலவ மயிலிவரும் கந்தவேள் தேரே
யுலவ நிலைபெயர்வுற் றோடப்—புலவர்

இரப்பாரை யில்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்
மரப்பாவை சென்றுவந் தற்றென்—றுரைப்பாவில்

---

193. (பொ.) முருகனை மகனாகப்பெறும் வாய்ப்புற்ற கங்கையானவள் உங்கள் 'உடன்பிறந்தார் ஊரைக்கண்டு வருவீர்' என்று தன் மக்களை விடுப்ப. (வி.) கங்கைமக்கள் வேளாளர். முருகனும் கங்கை மகன். எனவே சேய்ஊர் (முருகன்ஊர்) வேளாளர்க்கு உடன்வந்தார் ஊர் ஆகும்.

194. (பொ.) மறை முன்னோர் முத்தீவளர்க்க அவர் மனைவியர் விருந்தினால் பசித்தீயவிப்ப. உதரத்தீ-வயிற்றுத்தீ.

195—6. (பொ.) அவ்வூரில் வருத்தும் தொழிலைக் கொடியனையார் முலைக்குன்றே செய்ய, பசியால் துவளுதலின்றி மகளிர் துடியிடையே துவள, கந்தவேள் தேரே நிலைபெயர்ந்து ஓட.

வருத்துதல், துவளுதல், ஓடுதல் என்ற குறைகளே இல்லை என்றபடி.

197—8. (பொ.) திருவள்ளுவர், "குளிர்ந்த இடமகன்ற இவ்வுலகம் இரப்பவரைக் கொண்டில்லை என்றால் அதன் நடைமுறை மரப்பாவை போதலும் வருதலும் செய்வது போலாம்" என்று தம் குறட்பாவில் சொல்லிவைத்ததற்கு அஞ்சிச் செல்வர்கள் இரப்பவர் வருகையை எதிர்நோக்கி யிருந்து வந்தால் உதவிசெய்ய. (வி.) புலவர்-திருவள்ளுவர், "இரப்பாரை......தற்று" திருக்குறள். செல்வம் நிறைந்த அவ்வூர் மக்கள் செல்வச் செருக்கில்லாமல் திருக்குறள் முதலிய நீதி நூல்களைக்கற்று அவற்றின்படி நடப்பவர் என மக்கள் சிறப்புக் கூறியவாறு.

வைதலை யஞ்சி வளத்தா ரிரப்பவர்தா
மெய்தலை நோக்கி யிருந்துதவப்—பொய்தவிர
வில்லென் பதுமொருவர் ஈயென் பதும்வினையாம்
சொல்லென்ப தின்றுபெயர்ச் சொல்லாக—நல்லவள
மிக்கெலா நாளும் விழவரு வீதியணி
திக்கெலா மேத்தமலி **சேயூரும்**—முக்கணனூர்

மயிலமலை

மந்திர மொன்று யிரமாய் வளர்ந்துபயன்
தந்திடு மொண்**மயிலைத்** தண்மலையும்—பந்தமறு

---

199. (வி.) இல், ஈ என்பன, இல்லை, கொடு எனப்பொருள் படின் வினைச்சொற்களாம். வீடு, பறவை எனப் பொருள்படின் பெயர்ச்சொற்களாம். அவ்வூரில் அவ்விரண்டு சொற்களும் வினைச் சொற்களாக இல்லாமல் பெயர்ச் சொற்களாகவே உள்ளன. அதாவது இல்லை என்போரும் எனக்கு ஒன்று ஈ என்போரும் அவ்வூரில் இல்லை என்பதாம். எனவே இரப்பாரும் இரப்பார்க்கு இல்லை என்று கரப்பாரும் இல்லை என்பதாம். "வண்மை யில்லையோர் வறுமையின்மையால்" என்றார் கம்பர். "கொடுப்போர்க் கிரப்பார் இல்லாத குறையொன்றுள்ளது" என இவ்வாசிரியர் வனவசை மாநகரைச் சிறப்பித்தமை காண்க.

200. (வி.) எல்லா நாளும் விழவு அருத வீதியணி சேயூர் என்க.

201. (பொ.) முக்கண்ணனின் ஐந்தெழுத்தை ஒருமுறை யோதின் அதுவே ஆயிரமுறை யோதியதாக வளர்ந்து பயன்தரும் அழகிய மயிலமலையும்.

(வி.) மயிலமலையில் முருகனேயன்றிச் சிவஞானியும் உறைதலின் ஒன்று ஆயிரமாய் விளைந்து பயன்தரும் என ஐந்தெழுத்தின் பெருமை கூறியவாறு.

202. (பொ.) தன்னையடைந்தவரைத் தன்போலாக்கும் (பிரமமாக்கும்) தன்மையுடைய சிவஞானி வாழ்கின்ற நல்ல தன்மையால்

பொம்மபுரம்

தன்னை மருவினரைத் தானாக்குந் தன்மையுடை
மன்னுசிவ ஞானி மருவிவாழ்—நன்னிலையில்

அம்ம பிரமபுர மாகும் பொருள்படவே
பொம்மபுர மென்னும் புகழ்ப்பதியும்—எம்மிறைவன்

வீற்றிருந்து வாழிடங்கள் மேவியிவற் றென்றினுறுந்
தேற்ற முணர்ந்துநீ செல்லுங்கால்—ஆற்றலுடன்

சமயவாதிகள்

இல்லை யிறைவனாற் பூதமலா லிங்கென்று 205
சொல்லி யுனைமறித்துச் சூழ்ந்துதான்—நல்ல

வலகா யுதமெறித லாயுரைப்ப னந்த
வுலகா யதனுரைகேட் டோடேல்—பலகாலும்

நாணேது மின்றிக் கருமமலால் நானிறையைக்
காணேன் எனுங்**கரும காண்டி**யொடு—பூணேல்

நினையணு வாக்கும் **நியாயன்** உரையைத்
தினையள வாயினுநீ தேறேல்—பினைவருவை

பிரமபுரம் எனப் பொருள்படவிருக்கும் பொம்மபுரம் என்ற புக ழமைந்த பதியும். பொம்மபுரம் இன்று பொம்மயபாளயம் எனப்படு கின்றது.

203—4. (பொ.) வெளிப்படை.

205—6. (பொ.) மண் நீர் அனல் காற்று ஆகிய நாற்பூதங்கள் தவிர இறைவன் என்பது ஒன்றில்லை என்பர் உலகாயதர்.

(வி.) வானைப் பூதமாகக்கொள்ளார் அவர். அலகாயுதம்-ஈட்டி.

207. (வி.) வினையே முத்தொழிலும் செய்வது; இறைவன் இல்லை என்பவர் கருமகாண்டிகள்-பூர்வமீமாம்சகர்.

208. (வி.) மனதை அணு என்பவர் நையாயிகர். நினை என்றது மனதை.

சேடியனை நெஞ்சமே சேரவவன் றம்பியென
நாடி யொருசிறிது நண்ணுறேல்—கூடியொரு

புத்திகண பங்கமெனப் புத்திகெட்ட **புத்த**னுரை
மெய்த்ததென நின்று விடாதிநீ--முத்திபெறு

தன்னை யணுவாக்கித் **தாழ்பாஞ்ச ராத்திரி**தான்
என்ன சொலினும் இசைந்துறேல்--நின்னைக்

கெடுப்பதே யெண்ணிக் கெடும்**யோ கிகளை**
விடுப்பதே நன்றென்று மேவேல்--அடுப்பதெனுக்

கள்ளைக் குடித்துக் களிக்கின்ற **வாமி**மொழி
கொள்ளத் தகுவதெனக் கொண்டுறேல்--மெள்ளப்

பகுதி விகுதி பகுத்தறியின் முத்தி
தகுதியெனும் **சாங்கியனைச்** சாரேல்--மிகுதிபெறு

---

209. (வி.) வைசேடியனைச் சேர நண்ணுறேல் என்க. நையாயிகரின் பிரிவினர் வைசேடியர். அவன்–நையாயிகன்.

210. (வி.) புத்தியைத் தவிர வேறு கடவுள் இல்லை என்பவர் புத்தர். அவர், புத்தியும் கணத்துக்குக் கணம் அழிவது என்பர். அதனல் புத்தியைக் கணபங்கம் என்பர். அதனல் புத்திகெட்ட புத்தர் என்றூர் ஆசிரியர். மெய்த்தது–மெய்யானது

211. (வி.) முத்திபெறு தன்னை – முத்தியெய்துதற்குரிய உயிரை. உயிரை அணு என்பவர் பாஞ்சராத்திரிகள்.

212. (வி.) நின்னை என்றது மனதை. மனதை யடக்க வேண்டும் என்பவர் யோகிகள். யோகிகள்பால் சென்றுல் நின்னைத் தடுத்துவிடுவர்; பின் எனக்குத் தூதுசொல்வாரில்லை என்றதாம்.

213. (வி.) வாமி–வாம மதத்தவர். சக்தி வழிபாட்டினர். கட்குடியினர்.

214. (வி.) சாங்கியன் தத்துவங்களைப் பகுதி விகுதி எனப் பகுத்துக் காண்பவன்.

நஞ்சமார் கண்டனெடு நாரணனை யொப்பாக்கும்
பஞ்சமா பாதகரைப் பாராமல்--அஞ்சிநீ

திருமடக்காட்சி

சென்று திருமடத்தைச் சேர்ந்துகழு நீர்த்தடமாய்
நின்று நறியகழு நீர்பூப்பத்—துன்று

முகிலா யடைந்துபுகை மூன்றுலகுங் காக்க
நிகமா கமம்விதித்த நீதி—யிகலாத

கோடிமறை யோர்நிறையக் கொள்ளுமுண வின்பயனை
நாடியிடும் பிச்சையா னல்குமொரு—கோடிசிவ

யோகிகட்குப் போன முவந்து சமைப்பாரைப்
போகிகட்குப் புற்றனைய பொற்சடையோன்—மோகிகட்குப்

---

215. (வி.) சிவனெடு நாரணனை ஒப்பாக்குதல் என்பது நாம் சிவனைப் பரம்பொருள் என்பதுபோல நாரணனைப் பரம்பொருள் என்பது. அவ்வாறு சொல்பவர் வைகாநதர். அதனுல் அவரை பஞ்சமாபாதகர் என்ருர். அஞ்சி-அஞ்சி ஒதுங்கி 216 திருமடத்தைச் சென்று சேர்ந்து எனக் கூட்டுக.

216—219. (பொ.) அரிசி கழுவியநீர் குளமாய்நிற்ப நறிய கழுநீர்ப்பூக்கள் அதில் பூத்திருக்குமாறும், செறிந்த அட்டிற்புகை முகிலாய் அடைந்து மூன்றுலகும் காக்குமாறும் சமைப்பாரை என்க. ஆகம விதிப்படி நீதிகடவாத ஒருகோடி பிராமணர்கள் தாம் கொள்ளும் உணவின் பயனை ஒரு சிவயோகி தனக்கு இடும் பிச்சையாலேயே தரக்கூடிய அத்தகைய ஒருகோடி சிவயோகிகட்கு உணவு உவந்து சமைப்பாரை என்க. இதனுல் திருமடத்தில் பிராமணர்களும் சிவயோகிகளும் உணவுண்ணல் கூறப்பட்டது.

219. (வி.) போகி - பாம்பு. பாம்பணிந்திருத்தலின் சடை புற்றுபோன்றது என்ருர். சடையோன்மோகிகள் - சடையுடைய சிவனிடம் மோகம்கொண்டவர்கள் அடியார்கள்.

பூசனைக்கு வேண்டும் பொருளுதவு கின்றாரை
வாசமலர் கொய்து வருவாரைப்—பூசனைசெய்

கின்றாரை ஞானநூல் கேட்பாரை நைந்தோதா
நின்றாரை மேனியெலா நீறணிந்து—குன்றாத

கண்டி புனைந்து கமலா தனத்திருந்து
கொண்டு சிவனைக் குறிப்பாரைக்—கண்டுருகிப்

போற்றுமுறை

போற்றிவணங் காவுட் புகுந்து புரமெரித்த
சீற்றம் மறந்ததெய்வச் சிங்கத்தை—மாற்றலரும்

சீமானை யென்றுந் தெவிட்டாத தெள்ளமுதைக்
கோமானை ஞானக் குணக்குன்றை—பூமாரன்

வண்டு படாத மலரைநாஞ் செய்தவத்தால்
கண்டுகொளும் தண்ணறும்பூங் கற்பகத்தை-மண்டலமும்

---

220. (வி.) பூசனைக்கு வேண்டும் பொருள்கள்: அங்க லிங்க வழிபாட்டுக்குரிய பாத்திரம், நீர், சந்தனம் முதலியன.

221. (வி.) நைந்து ஓதாநின்றார்-உளம்கனிந்து ஓதி நின்றார்.

222. (வி.) கண்டி–உத்திராக்கம். கமலாசனம்-பத்மாசனம்-தாமரையிருக்கை போட்டிருந்து.

குறிப்பார்–நினைப்பார்.

223—230. (பொ.) வெளிப்படை

223. (வி.) வணங்கா–வணங்கி. புரம்–திரிபுரம். சிற்றம் மறந்தது சிவஞானியானதால். சிங்கமாயினும் சீற்றம் மறந்ததாம். மாற்றல்–வெல்லுதல்.

225. மாரனாகிய வண்டு என்க. மன்மதன் செயல் சிவஞானியிடம் இல்லையாதலின் அவர் மாரனாகிய வண்டுபடா மலரானார். தவம் செய்தமையால் இப்பூவுலகில் கற்பகத்தைக் கண்டுகொள்வோம் என்க.

ஏனைப் புவனங்க ளெல்லாமும் வேண்டுபசுந்
தேனைச் சிவஞான தேசிகனை—நீநெக்

குருகியெதிர் கண்டுகொண்டே யோடிப் பெருமான்
திருவடியில் வீழ்ந்தன்பு தேங்கிப்—பருகமுதே

வேண்டுவார் வேண்டுவன வேண்டியவா றேயுதவும்
ஆண்டகையே யெங்கள் அரசனே—நீண்டவொரு

தந்திதரு பச்சைபுனை தன்மையான் ஈண்டுபச்சைக்
கந்த மரபிலுறுங் காரணனே—பந்தமற

வாளாய வன்பர்க் கமரா பதம்போல
மீளாத வீடுதவும் வித்தகனே—வேளாணை

தள்ளு மடியார் தமக்குத் துணையாகக்
கொள்ளு மிருமலர்த்தாள் குஞ்சரமே—விள்ளலறப்

பத்திக் கடலுட் படிந்த வடியார்க்குத்
தித்திக்குங் கோதிலாத் தேறலே—முத்திக்குச்

---

229. ஒருதந்தி–தாருகவனத்து முனிவர் யாகம்செய்து அனுப்பிய யானை. பச்சை–அதன்தோல். சிவஞானி பச்சைக்கந்த மரபில் வந்தவர். சிவபிரான் யானைத்தோல் உரித்து அப்பச்சைத்தோலைப் போர்த்தவர்; அவரே சிவஞானியாக வந்தமையால் அதற்கேற்பப் பச்சைக்கந்த மரபில் உற்றார் என்றார். இதில் சொல் ஒப்புமைமட்டும் கொள்க.

239. அமராபதம்–இந்திரபதம். மீளாதவீடு–மீண்டும் பிறவாமைக்கேதுவாகிய வீடு. வேள் ஆணை–மன்மதன் ஆட்சி.

231. குஞ்சரம்–யானை; இருமலர்த்தாள் குஞ்சரம் என்றமையின் சிவஞானியை யுணர்த்தும்.

விள்ளலற–சொல்லமுடியாதபடி.

231—232. (பொ.) வெளிப்படை. 232. கோது–சக்கை. 233. முத்திக்கு உரிமை சாதியாலன்று என மாறும். சாதனம் நான்கு. அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. போதியா

சாதியா லன்றுரிமை சாதனத்தா லென்றுண்மை
போதியா நல்குமொரு பொன்மலையே—நீதியால்

வீடும் பொருளும் வெறுத்துமுத்தி வேண்டுவார்
தேடும் சிவஞான தேசிகனே—பாடும்

தலைவி நிலைகூறல்

பொருளே யெனவணங்கிப் போற்றிநின்று நின்பேர்
அருளே துணையவே றறியேன்—தெருளே

நினது திருப்பணி நேர்ந்தநாட் டொட்டுக்
கனலின் மெழுகாய்க் கரையும்—புனல்பெருகு

கண்ணொடு நின்றேங்கும் கங்குல் பகலின்றி
யுண்ண வுடுக்க வுவப்பொழியும்—பண்ணொடு

பாடும் நினைமெய் பதைக்கும் நினையெங்கும்
தேடும் உருகும் திகைத்தலறும்—வாடுமெனைப்

பாரானோ வென்னும் பரமசிவ ஞானி
வாரானோ வென்னும் வழிபார்க்கும்—ஓரானோ

வென்னோ வெனப்புலம்பும் என்னைநின்பாற் றூதாக
வன்னோ பலசெய் தழுரெய்தும்—தன்னோர்

உடம்பும் பொறையாய் ஒழிப்பக் கருதும்
குடும்பம் பகையாகக் கொள்ளும்—அடங்க

ஒருபூ தருமில்லா துற்ற விடத்தே
வருபூ ரணமா மருவி—யொருபோதும்

நல்கும்–போதிக்கும். 234. விடு–மனை. 235. நேர்ந்தநாள்–எதிர்ப் பட்ட நாள். கனல்–நெருப்பு.

240. தூதாகச்செய்து பல அழுர்எய்தும் எனமாறுக. அழுர்–துன்பம், அன்னோ–ஐயோ; இரக்கக் குறிப்பு.

வேறிலா தொப்ப விரும்புமவ் வென்னுயிரை
மாறிலா ஞான மணிவிளக்கே—யீறிலாச்

செல்வமே யெங்கள் சிவஞான தேவனே
கல்விகொடு காணாத காட்சியே—புல்லுவாய்

புல்லு மளவும் உனைவிட்டுப் போவதுநான் 245
இல்லை யிறைவனே என்றுநீ--தொல்லை

விடய நினைந்தகன்று மீளாமல் நில்லாது
உடைய மலவிருளை யோட்டும்--சுடரை

மரமும் நிழலும்போல் மாழையும் பூணும்போல்
இருமை யபேதம்என்ப தென்றும்--பரமுயிர்கள்

வேறென்றும் வேறல்ல வென்றும் விளம்புதலால்
வீறொன்று தாதான் மியமென்று--மாறின்று

242—243. (பொ.) ஒருயிரும் இல்லாது தனித்துற்ற விடத்தில் வருகின்ற சிவபூரணமாக (இரண்டறக்) கலந்து ஒருபோதும் வேறுபடாது ஒன்றியிருக்க விரும்பும் என்னுயிரைப் (244) புல்லுவாய் என முடிக்க.

244. (வி.) கல்வி யறிவுகொண்டு காணமுடியாத காட்சிப் பொருளே என்றது, உண்மை ஞானத்தாற் காணப்படும் காட்சிப் பொருள் என்பதாம்.

245. தொல்லை விடயம்-பூர்வவாசனை. முன்பிறவி வாசனையால் உலக இன்பம் நினைந்து அவனைவிட்டு மீளாமல் மாலைவாங்கிவா (255) என முடிக்க. நில்லாது உடைய-நிற்காது அழிய.

246. (பொ.) இறைவனும் உயிரும் முத்தி நிலையில் மரமும் நிழலும் போலவும், பொன்னும் அதனாலாக்கப்பட்ட பூணும்போலவும் இருதன்மையான அபேதமாகும் என்றும்

247. (பொ.) பரமும் உயிர்களும் வேறு என்றும் வேறற்றவை என்றும் சொல்லுதலால் அவை விளக்கமுள்ள தாதான்மியமாகும் என்றும். தாதான்மியம்-ஒன்றுபட்டிருப்பது.

சாமி யடிமையெனும் சம்பந்தம் என்றுமுளம்
வேமிகலே யோர்மொழியில் வீப்பானைத்--தோமில்

உலகிற் கிறைவன் உபாதான மென்றும்
இலகுற்ற நன்னிமித்த மென்றும்--நிலவுற்ற

ஆவி யணுவென்றும் அன்று நிறைவென்றும்
மேவிய மாயைதான் மித்தையென்றும்--ஒவிலது

நித்திய மென்றும் நிகழ்த்தி மயங்கும்போர்
அத்தனையும் தீர்த்த அருளானைப்--பத்தரிடை

யுள்ள படிதோற்றும் உண்மை யுடையானைத்
தெள்ளும் சிவஞான தேசிகனை--விள்ளலறப்

பற்றி யடியேன் படுமிப் பெருந்துயர
முற்று மறிந்துசெல முன்னுநீ--யெற்றுதிரை

வேலையுல கெல்லாம் வியக்கும் **சிவஞானி**
மாலைமன மேவாங்கி வா.

---

248. (பொ.) மாறுபாடின்றி ஆண்டான் அடிமை என்ற சம்பந்தம் என்றும் இப்படியாக உளம் தடுமாறும் மாறுபாட்டைத் தத்துவமசி என்ற ஓர் மொழியால் அழிப்பவனே.

250—255. (பொ.) வெளிப்படை.

250. உபாதானம்-முதற்காரணம்.
நிமித்தம்-நிமித்தகாரணம்.

251. அணு-நுண்மை, நிறைவு-பருப்பொருள்.
மித்தை-அழிவது-பொய்.

தனிப்பாட்டு

என்னோ டிருக்கும் எனினும் சிவஞானி
யன்னோ நினைவிடுத்தா லன்றியே--தன்னாசை
வஞ்சமே செய்குவனால் மற்றவன்பால் தூதாக
நெஞ்சமே செல்விரைந்து நீ.

(பொ.) நெஞ்சமே! சிவஞானி என்னுடனேயே இருப்பவன் என்றாலும் நின்னைத் தூதாக விடுத்தால் அல்லாமல் தான் என்பால் வைத்த விருப்பத்தை மறைக்கவே செய்வான்; ஆதலின் அவன்பால் நீ தூதாக விரைந்து செல்.

சிவஞானி உடனிருந்தாலும் மன அன்பினாலேயே அவனருளைப் பெறலாகும் என்பது கருத்து.

சிவஞான பாலய தேசிகர் நெஞ்சுவிடு தூது உரை முற்றும்.

ஹனுமான் அச்சியந்திரசாலை, விழுப்புரம்